Registered as a News paper பக்கங்கள் 14 விலை ரூபா 6.00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நல்லூர் ... நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 26 (8.4.94) வெள்ளிக்கிழமை ஓசை 49

## த. பொ. கல்வித் தேர்வு இன்று பரிசளிப்பு விழா

தமிழீழக் கல்விமேம்பாட்டுப் பேரவையால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வில் தேசிய, கோட்ட மட்டங்களில் கூடுதல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு இன்று தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் வழங்கும் பணப் பரிசில்களும், பாராட்டுச் சான்றிதழ்களும், கல்வி மேம்பாட்டுப் பேரவையினரின் சான்றிதழ்கள், பதக்கங்கள், பரிசுகளும் வழங் (13ஆம்பக்கம் பார்க்க)

# ஐ. தே. க. ஊழலை விசாரிக்க முன்னாள் அதிகாரிகள் கமிட்டி!

## தன்னிச்சையாக அமைத்தனர்

[கொழும்பு]

ஐக்கியதேசியக் கட்சியின் பதினேழு ஆண்டுகால ஆட்சியில் இடம்பெற்ற அதிகார துஷ்பிரயோகம் ஊழல், பழிவாங்கல் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள ஓய்வுபெற்ற இராணுவம் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் கொண்ட குழுவொன்று விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இக்குழு இவ் அதிகாரிகளால் தன்னிச்சையாக அமைக்கப்பட்டுள்ளது

இக்கட்சியின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற அதிகார துஷ்பிரயோகங்கள், ஊழல், பழிவாங்கல், மனித உரிமை மீறல் பற்றிய விடயங்கள் குறித்து சரியான, தெளிவான தகவல்கள் வழங்கப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சில இராணுவ, பொலிஸ் அதிகாரிகள்கூட இவ் அரசாங்கத்தினால் பாதிப்படைந்துள்ளனர். இவர்கள் தமது சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் கட்டாய ஓய்வுக்கு உள்ளாக்கப்பட்டும், பழிவாங்கல்கள் மாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டும் உள்ளனர் இதனைத்தொடர்ந்தும் அனுமதிக்கமுடியாது. இது குறித்த பூரண விளக்கத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்.

யுத்தம் எனக் கூறிக்கொண்டு மக்கள்மீது பாரிய சுமையை ஏற்றி தாமும் தமக்கு நெருங்கிய தொடர்புடையவர்களும் பெருமளவு பணம் சம்பாதிக்கின்றனர். இவ்வாறான விடயங்கள் குறித்து குழுவினர் தீவிரமாக விசாரிப்பர். இக்குழுவிற்கு சம்பந்தப்பட்ட பல உயர் அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இக்குழுவினர் விசாரணைக்கென எடுத்துக்கொண்டுள்ள விடயம் எதிர்காலத்தில் ஐக்கியதேசியக்கட்சிக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும், இவ்விசாரணைக்குழுவின் முடிவை ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தலின்போது எதிர்க்கட்சியினர் பயன்படுத்துவர் எனவும் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## மணலாற்றுப் பகுதியில் விமான குண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாற்றுக் காட்டுப் பகுதியில் சிறிலங்கா படைகள் குண்டுவீச்சு மற்றும் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டன. கடந்த ஞாயிறன்று நண்பகல் 11 மணியளவில் இத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

குண்டுவீச்சு விமானங்கள் மற்றும் உலங்குவானூர்தியும் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தின. அத்துடன் மணலாற்று கரையோரப் பகுதி இராணுவத் தளங்களிலிருந்து எறிகணைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. சேத விபரம் தெரியவரவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜெயபூமி என்ற பெயரில் இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரத்தினர் தெரிவித்தனர்.

இந்த இராணுவ நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதெனத் தெரிவிக்கப்படுகிறது.

## 40 வெளிநாட்டு பிரஜைகளை வெளியேற அரசு உத்தரவு

### பாதுகாப்பு அச்சுறுத்தலாம்

(கொழும்பு)

சிறிலங்காவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ளவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இவ்வருட ஆரம்ப முதல் மூன்று மாத காலப் பகுதியில் சுமார் 40 வெளிநாட்டவர்களை சிறிலங்கா அரசாங்கம் வெளியேற்றியுள்ளது.

வர்த்தகங்களில் முதலீடு செய்வதாகக் கூறிக்கொண்டு இவ் வெளிநாட்டுப் பிரஜைகள் சிறிலங்காவிற்குள் நுழைந்து கொண்டதாகவும் இவர்கள் பின்னர் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான சில நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் எனவும் சிறிலங்காவின் குடிவரவு - குடியகல்வு மற்றும் குற்றப் புலனாய்வுத் துறையினர் கூறுகின்றனர்.

## சமாதான முயற்சிகளில் சர்வதேச நிறுவனம்

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதியில் சமாதானத்தையும் அமைதியான சூழ்நிலையையும் உருவாக்கும் முயற்சியில் சர்வதேச தொண்டர் நிறுவனமான "சமூக பொருளாதார முன்னேற்ற நடுநிலையம்" என்ற அமைப்பு தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளது.

சமாதானத்தையும் அதற்கான சூழலையும் உருவாக்கும் முயற்சியாக இந்த நிறுவனம் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றது. சமாதானத்தில் நாட்டமுள்ள அரசாங்க உயர் அதிகாரிகள் அரச சார்பற்ற தொண்டர் அமைப்புகளின் அதிகாரிகள் மற்றும் மத நிறுவனங்களின் மதத் தலைவர்கள் ஆகியோருடன் மேற்படி நிறுவனம் தொடர்ந்தும் பேச்சுவார்த் (13 ஆம் பக்கம் பார்க்க)

மன்னார்- வன்னி- முல்லையில்

## மாணவர் அமைப்பின் பண்பாட்டுப் பவனி - 1994

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு நடாத்தும் பண்பாட்டுப் பவனி-1994 நிகழ்வுகள் மன்னார், வன்னி, முல்லை பிரதேசங்களில் இன்று முதல் எதிர்வரும் 25-ம் திகதி வரை இடம்பெறவுள்ளன. இப்பண்பாட்டுப் பவனியில் "பொய்க்கால்" நாடகம், சமூக ஊடாட்ட அரங்குகள், விவாத அரங்குகள், கலைஞர் சந்திப்புக்கள், களப் பயிற்சிகள், வீரதீர விளையாட்டுகள் என்பன இடம்பெறுகின்றன. இவை மேற்படி பிரதேசங்களில் பரவலாக நடைபெற விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

## திருமலையில் ராணுவநடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலை மாவட்டத்தில் நந்திமித்ர இராணுவ நடவடிக்கையை சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளதாக சிறிலங்கா வானொலி தெரிவித்தது.

கின்னக் கிண்ணியாவின் மேற்குப் பகுதிக் காடுகளில் இந்த இராணுவ நடவடிக்கை இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஐ.தே.கவுடன் எப்பொழுதும் இணையப் போவதில்லை

### - பிரேமச்சந்திரா

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியுடன் தான் எந்தக் கட்டத்திலும் ஒன்றிணையப் போவதில்லையென்றும் தனது கட்சி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியாகவே தனித்துவமாக இயங்கும் என வடமேல் மாகாண முதல் அமைச்சர் டி. எம். பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்

மிக விரைவில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் கீழ் வடமேல் மாகாணம் கொண்டு வரப்படும் என ஆளும் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து லங்காதீப பத்திரிகையாளர் கேட்கும் போது மேற்படி கருத்தை (13ஆம் பக்கம் பார்க்க)

## கோமாரி தாமதம்

(யாழ்ப்பாணம்)

கோமாரிக் கப்பல் கொழும்பு துறைமுகத்திலிருந்து புறப்பட்டு வருவதில் தாமதமாகியுள்ளது. கொழும்பில் தொடர்ந்து பெய்து வரும் கடுமையான மழையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இக்கப்பல் நேற்று மாலை கொழும்பு துறைமுகத்தில் புறப்பட ஆயத்தமாகியிருந்ததாக அறியப்பட்டது. இக் கப்பலிலேயே யாழ். அரசாங்க அதிபர் வருகிறார். (தி)

தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வு

## தமிழ் மொழியில் கூடுதல் புள்ளி பெற்றோருக்கு பரிசு

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு1993இல் தமிழ்மொழிப் பாடத்தில் தேசிய மட்டத்தில் கூடுதல் புள்ளிகளைப் பெற்று தமிழ் வளர்ச்சிக்கழகம் வழங்கும் பணப்பரிசையும் பாராட்டிதழையும் நான்கு மாணவர்கள் இன்று பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

கௌதர்சினி சிவசுப்பிரமணியம் வேம்படி மகளிர் கல்லூரி 96 புள்ளிகள்

சதானந்தன் சேந்தன் யாழ் இந்துக்கல்லூரி 94 புள்ளிகள்

மகேந்திரம் உமாகாந்தன் ஹாட்லிக் கல்லூரி 93 புள்ளிகள், சிவபுண்ணியம் சசிகுமார் ஹாட்லிக்கல்லூரி 93 புள்ளிகள ஆகியோர் மேற்படி பரிசில்களைப் பெறவுள்ளவர்கள் ஆவர்.

முதலாவது இடத்தைப் பெறுபவர் மூவாயிரம் ரூபாவையும் இரண்டாமிடத்தைப் பெறுபவர் இரண்டாயிரத்து ஐந்நூறுரூபாவையும் மூன்றாமிடத்தைப் பெறுபவர்கள் இரண்டாயிரம் ரூபாவையும் பெறுகின்றனர். இவர்களுக்கான பரிசில்கள் பரிசளிப்பு விழாவில் வழங்கப்படும்.

பொன்னாலை, மூளாய் குடியிருப்புக்கள் மீது

## காரைநகரிலிருந்து பலத்த எறிகணை வீச்சு

காரைநகரில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் தமது காவல் நிலைகளிலிருந்து நேற்று முன்தினம் நண்பகல் 1,00 மணியளவில் பொன்னாலை, மூளாய் பகுதிகளின் மக்கள் குடியிருப்புக்கள் மீது கண்மூடித்தனமான எறிகணை வீச்சினை மேற்கொண்டதில் சிறுவன் ஒருவன் காயப்பட்டதுடன், பல வீடுகளும் சேதமுற்றன.

இச்சம்பவத்தில் கோபாலன் ஜெகதீசன் (வயது 5) என்ற பாலகனே எறிகணை வீச்சின்போது இடது காலில் (13ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

**உணவு சேவையில் ஒரு விசித்திரம் காருண்யா**

சுவைமிகுந்த சூப் வகை, மேலைத்தேயசீனநாட்டுஉண வுவகைகளை தரம், சுவை, சுகாதாரம் குன்றாது ஒரே இடத்திற்பெற்றிட நாடுங்கள். KARUNYA CHINESE 166. 1st Cross Street, JAFFNA (7978)

**மணமகள் தேவை**

கனடாவில் தொழில் புரியும் மணமகனும் இந்து சமயத்தைச் சேர்ந்தவரும் ஏழில் செவ்வாயுடைய (பாவம் கூடிய) ஜாதகத்தை உடைய மணமகனுக்கு வயது32 பெற்றோர் கௌரவமான அழகிய படித்த மணமகளைத் தேடுகின்றார்கள். தொடர்பு: P.செல்லப்பா, 21/1 விராவிலி வீதி, யாழ்ப்பாணம். (7942)

**ஆங்கில மருத்துவம்**

சகலவிதமான நோய்களுக்கும் அனுபவம் வாய்ந்த மருத்துவர்களினால் தினசரி காலை, மாலை சிகிச்சை அளிக்கப்படுகின்றது: பகவான் ஆங்கில மருத்துவ அகம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-9016)

**விற்பனைக்கு**

சுத்த இன பொமரேனியன் 1 1/2 மாதம் நிரம்பிய நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. பூச்சி நீக்கப்பட்டது. செல்வம், 107, டேவிற் வீதி, பெரிய தபாற்கந்தோர் அருகாமை யாழ்ப்பாணம். (7960)

**1994-95 பவ வருஷ புத்தாண்டுப் பலன்கள்**

எல்லா இராசிகளின் பலன்கள் ரூ 10/- எங்கும் விற்பனையாகின்றது; (நூலாசிரியர் Prof. T. சத்தியதாசன் சட்டுவடை). நூல்கள் கிடைக்குமிடம் சோபிதாபுத்தகசாலை யாழ்ப்பாணம். (7968)

**குருபூசையும் சொற்பொழிவுகளும்**

ஸ்ரீ ரமணபகவான் சமாதி குருபூசை இன்று உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் நடைபெறும். ஈசாவாசிய உபநிடத, அத்வைதவேதாந்த சொற்பொழிவுகளை ஞாயிற்றுக்கிழமை (10-4-94) திரு. சி. வெங்கடேஸ்வரசர்மா, திரு. வ. இன்னப்பு நிகழ்த்துவார்கள். (7967)

**மார்க்கோசின் பூச்சிகொல்லி**

பசுமையான பயிர்களைப் பூச்சி புழுக்களிலிருந்து பாதுகாக்க மார்க்கோசின் பூச்சி கொல்லி. யாழ். நகரில் "ஸீமெக்" ஸ்தாபனத்திலும், வெளி இடங்களில் கமநல சேவை நிலையங்களிலும் விற்பனைக்கு உள்ளது. "மில்க்வைற்" (சி-9027)

**NEW PUBLICATION**

CHURCH, POLITICS & WAR (THEOLOGISING CONTEXTUALLY AMIDST A WAR) by S. J. EMMANUEL Rs. 40/- OBTAINABLE CENTRE FOR BETTERSOCIETY, 115, FOURTH CROSS STREET, JAFFNA (7946)

**தேவை**

சலவைமான வீடியோ செற், ரெப்செற் வகைகள், டெக், கமறா மற்றும் எலெக்ரோனிக் பொருட்களை நியாய விலை கொடுத்து வாங்கப்படும். தொடர்புகளுக்கு மின்வலம் இல.8 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-8985)

## மென்பான விற்பனையாளருக்கு ஒரு நற்செய்தி!!

தற்போது பின்வரும் இடங்களில் TASTY மென்பானங்களை நீங்கள் மொத்தமாகக் கொள்வனவு செய்யலாம்.

1. மாருதி ஸ்ரோஸ், கே. கே. எஸ் றோட், வல்வெட்டித்துறை
2. வேலவன் ஸ்ரோஸ், பருத்தித்துறை
3. சாயிகிருஷ்ணா, வதிரிச்சந்தி, நெல்லியடி
4. முருகன் ஸ்ரோஸ், சிறுப்பிட்டி
5. அறிவகம், சாவகச்சேரி
6. சாந்தி ஸ்ரோஸ், கண்டி வீதி, பளை



**TASTE LINE INDUSTRIES /PVT/ LTD.**

14, Seenier Lane, JAFFNA

(சி- 9043)

தாகம் தீர்க்க தரமான மென்பானம்....

## பாம்கோலா

மற்றும்

**சோட்டா, ஒரேஞ் ஸ்பெஷல் ஜிஞ்சர் பியர்**

**வாயு ஊட்டப்பட்டவை**

தரமானது - சுவையானது - மலிவானது

உற்பத்தி:

**பனை அபிவிருத்திச் சபை**

ஏக விநியோகஸ்தர்:

**றோயல் ஏஜென்ஸி**

பிரதான வீதி, யாழ்ப்பாணம்

(சி-9035)

Personal

## NEW SCIENCE CENTRE

**எழிலகம் முன் - யாழ்ப்பாணம்**

**96 A/L கணித உயிரியல் வகுப்புக்கள்**

தூய-பிரயோக கணிதம்:
திரு. குணசிங்கம் B. Sc. (Hons) Dip. In. Ed

பௌதிகவியல்:
திரு. ரவீந்திரநாதன் B. Sc. (Cey) Dip In Ed

இரசாயனவியல்:
திரு. செல்வா B. Sc. (Hons)

விலங்கியல்:
திரு. ஈஸ்வரதாசன் B. Sc. (Hons) Dip In Ed

தாவரவியல்:
திரு. பாலா

ஆரம்பம்: 9. 4. 94 சனி

அனுமதி ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

(சி-9044)

## நினைவு கூருகின்றோம்...

## 1994-04-08

1985-ம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் - பூநகரிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய,

குமா (இரத்தினம் குமாரசாமி-கறுக்காத்தீவு, பூநகரி-மன்னார்)

1987-ம் ஆண்டு மூச்சைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

ஈசன் (குமாரசேகரம் சுமனநாதன்-திருமலை)

யாழ்-கோப்பாய் பாலத்தடியில் உலங்குவானூர்தியின் மூலம் தரையிறங்க முயன்ற சிறிலங்கா இராணுத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

சிவா (சுப்பையா சிறிராஜேஸ்வரன்-பூம்புகார், கல்மடு-வவுனியா)

சுருளி (மகாலிங்கம் விஜயராசா-சாவற்காடு, மானிப்பாய்-யாழ்)

செனித் (நடராசா ஜெயப்பிரகாஷ்-நயினாதீவு-யாழ்)

1988-ம் ஆண்டு மட்டு - கிண்ணியடிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

லெப் சுதர்சன் (சச்சிதானந்தம் தாமன் புன்பராசாகிரான்-மட்டு)

யோசப்/மாமா (நாகமணி சித்திரன்-கிரான்-மட்டு)

மட்டு-திகிலவெட்டைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

நிக்சன் (பிள்ளையான் சர்வராசா-சந்திவெளி-மட்டு)

1989-ம் ஆண்டு யாழ்-ஊர்காவற்துறையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

லெப். குட்டி-கண்ணன் (மருதப்பு யோகேஸ்வரன்-3-ம் வட்டாரம், நெடுந்தீவுமேற்கு-யாழ்)

கஜன் (--- ---- --)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-9042)

## SCIENCE COLLEGE

## விஞ்ஞானக் கல்லூரி

பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

**96 A/L கணித, உயிரியல் வகுப்புக்கள்**

இரசாயனவியல்
திரு. A. மகாதேவா B.Sc (Hons) Dip. In Ed

பௌதிகவியல்
திரு. ரவீந்திரநாதன் B.Sc. (Cey) Dip. In Ed
திரு சூரியநாதன் B Sc.(Hons) Dip In Ed

தூய - பிரயோக கணிதம்
திரு குணசிங்கம் B Sc (Hons) Dip in Ed

விலங்கியல்
திரு, ஈஸ்வரதாசன் B Sc(Hons) Dip In Ed

தாவரவியல்
திரு, செல்வநேசன்

புதிய வகுப்புக்கள்

09.04.94 சனிக்கிழமை ஆரம்பமாகும்.

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(சி- 9045)

யாழ் நகரிலிருந்து **புதினம்** மிக விரைவில்

பல்சுவைக் கிழமை இதழ்

எல்லோரும் விரும்பிப் படிக்கக் கூடிய புதிய சஞ்சிகை

## விற்பனையாளர்களே!

எமது பிரதிநிதி இவ் வாரத்தில் உங்களை நேரில் சந்திப்பார். 12-04-94க்கு முன் அப்படி அவர் சந்திக்காவிடின் உடனே நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: புதினம், 226, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம். (7963)

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# ஐ. தே. கவின் உட்கட்சிப் பூசல்; ஆரவாரமின்றி அடங்கிப் போகுமா?

ஐக்கிய தேசிய கட்சியினுள் தற்போது உட்பூசல் முற்றி பழுத்துள்ள நிலையில் காணப்படுகின்றது. ஆங்காங்கே சிறு சிறு வெடிப்புக்கள் காணப்பட்டபோதும் அவற்றை பூசி மெழுகுவதற்கான முயற்சிகளில் தற்போது ஐ. தே. க ஈடுபட்டு வருகின்றது. இதன் ஒரு அங்கமாகவே கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கொழும்பு மத்திய நிறைவேற்று குழு கூட்டம் மத்திய மாகாண நிறைவேற்று குழு கூட்டம் மற்றும் ஐந்தாம் திகதி நடைபெற்ற செயற்குழு கூட்டமும் அதே தினம் நடைபெற்ற கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கூட்டம் என்பனவற்றை எடுத்து கொள்ளலாம்.

இக் கூட்டங்கள் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தும்என கருதப்பட்ட போதும் நேரடியான கூட்டத்தில் எந்தவொரு சர்ச்சை ஏற்படவில்லையென்றாலும் அதை தொடர்ந்து பத்திரிகையாளருக்கு பல உறுப்பினர் வழங்கிய செவ்விகளில் இருந்து கட்சி உறுப்பினரிடையேயுள்ள பிளவு, நிலையை முரண்பாட்டை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது என பலர் கருதுகின்றனர்.

கட்சியடைந்துள்ள முரண்பாடு என்பது எந்த நிலையில் வெடித்து இறுதி கட்சி எதிர்காலத்தையே நிர்மூலம் ஆக்கி விடுமோ என்ற அச்சம் தற்போது சில உறுப்பினர்களிடையே ஏற்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய மாகாண நிறைவேற்று குழு கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட அதன் செயலாளரான சிறிசேன குரே ''மனிதனுக்கு பிரச்சினை ஏற்படுவது வழக்கமானது எனவே பிரச்சினைகளை அவன் பேசி தீர்க்க கூடிய நிலையில் பிரச்சினைகளை அணுக வேண்டும் அதை விட்டு விட்டுமறைமுகமாக செய்திகளையோ அன்றி அழைப்புக்களை விடுவதன் மூலம் பிரச்சினை தீர்க்கப்படமாட்டாது. ஆகவே என்னிடம் நேரடியாக இவர் கருத்துக்களை தெரிவித்தால் நான் எனது பதவியை விட்டு விலக தயாராக இருக்கின்றேன். மறைமுகமாக என்னை பதவி விலக செய்ய நினைத்தால் நான் ஒரு போதும் பதவி விலக மாட்டேன் இதனை சகலரும் புரிந்துகொள்ள வேண்டும். என்று பலத்த கரகோஷத்திற்கு மத்தியில் தெரிவித்தார். இக் கூட்டத்திற்கு கப்பல் போக்குவரத்து அமைச்சரும்மாத்தளைபாராளுமன்ற உறுப்பினருமான அலிக் அலுவிகாரை தலைமை வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இக்கூட்டத்திற்கு சுமுகமான சூழ்நிலையில் கட்சிஉறுப்பினர்கள்மாகாண அமைப்பாளர்கள் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டபோதும் தலைமைவகித்தவரின் மகனும் மாத்தளை நகரசபை பிதாவும் அத்தோட்டத் தொகுதி ஐக்கிய தேசிய கட்சி அமைப்பாளருமான ரஞ்சித் அலுவிகார கூட்டம் நடைபெற்று மூன்று நாட்களின் பின்னர் தனது கட்சி உறுப்பினர் பதவியையும் ஏனையபதவிகளையும்இராஜினாமா செய்து விட்டதாக கட்சி பொதுசெயலாளருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். இதனை தொடர்ந்து அந்த நகரசபை உறுப்பினர் ஆறு பேர் தனதுகட்சி அங்கத்தவர்பதவியில் இருந்து இராஜினாமாச் செய்து விட்டனர்.

ஆனால் டி.பி.யின்காத்திரமான மத்திய மாகாணத்தில் மட்டுமே கட்சிக்குள் பிளவு படும் சாத்தியக்கூறு வெகுவாகக் குறைந்து உள்ளதாக கருதப்பட்ட போதும் அங்கு தான் முதல் வெடிப்பு ஆரம்பமானது என பலர் கருதுகின்றார்கள். இவரின் இராஜினாமாக் கடிதத்தை ஏற்றுக்கொண்ட பொதுச் செயலாளர் சிறிசேன குரே இதனை கட்சித் தலைவரும் ஜனாதிபதியுமான டி. பி. விஜேதுங்காவிடம் அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று கொழும்பு மத்தி நிறைவேற்றுக் குழுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த கட்சிப் பொதுச்செயலாளர் சிறிசேன குரே தனது தலைமையுரையில் பின்வருமாறு தெரிவித்தார். ''எனக்கு கட்சிப் பொதுச்செயலாளர் பதவியானது கட்சிக் கூட்டத்தில் பிரேரணைசெய்து தரவில்லை. அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னாவின் மறைவைத் தொடர்ந்து இப்பதவியை ஏற்க யாரும் முன்வராத சமயத்திலேயே மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா என்னைத் தனது இல்லத்திற்கு அழைத்து குரே இப்பதவியை நீ ஏற்றுக்கொள் நான் உனக்குப் பக்கத்துணையாக இருக்கிறேன் என என் மீது பலவந்தமாக திணிக்கப்பட்ட பதவி இது''

---

**நிமலராஜன்**

---

எனவே இப்பதவியை தற்போதைய ஜனாதிபதி என்னிடம் நேரடியாக விட்டு விலகுமாறு கூறினால் மட்டுமே நான் எனது பதவியை விட்டு விலகத்தயாராக இருக்கின்றேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

## கருத்து வேற்றுமையில் ஐ. தே. க.

ஆகவே தற்போது மறைமுகமான கருத்து வேற்றுமைகளும், குத்துவெட்டுகளும் கட்சியில் நிலவுகின்றபோதும் மிகவும் அமைதியாகவும் வெளிப்பிணக்குகள் அற்ற நிலையில் கட்சி மாநாடு நடைபெற்று முடிந்தபோதும் எத்தனை நாட்களுக்கு இந்தப்போலி ஒற்றுமையைக் கட்டிக்காக்கப் போகின்றார்கள் என்பது கேள்விக்குறியாகவே அமையப்போகின்றது

ஐ தே கவிற்குள் முரண்பாடு என்பது அக்கட்சி ஆரம்பத்திலே இருந்துவரும் ஒரு சாதாரண விடயமாகவே இருந்து வந்துள்ளது. கட்சி உரிய முறையில் சிலருக்கு முக்கிய பதவிகளை வழங்காமையினாலும், ஒருவருக்கு குறிப்பிட்ட காலத்தில் தம் பிக்கை ஊட்டும் விதத்தில் நடந்து கொண்டு பின்னர் அவர்களை தூக்கி வீசிவிட்டு வேறொருவரை நியமிப்பதினால் இந்த நிலை ஏற்பட்டு வந்தமையை நாம் காணக் கூடியதாக இருக்கின்றது.

டி. எஸ். சேனாநாயக்காவுக்கும் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்குமிடையே ஏற்பட்ட பதவிப் போட்டிக் கருத்து வேற்றுமையை தொடர்ந்து பண்டாரநாயக்கா ஐக்கிய தேசிய கட்சியை விட்டு வெளியேறி புதிய கட்சியொன்றை ஆரம்பித்தார். இதற்கு கட்சி உட்பூசல் காரணமாக இருந்தது. கட்சி உட்பூசலின் மத்தியில் கட்சிக்கூட்டங்கள் நடைபெற்றன- அதில் பண்டாரநாயக்கா தனக்கும் டி. எஸ். சேனாநாயக்காவுக்கும் இடையே கருத்து வேற்றுமைகள் கிடையாது எனக் கூறியமையும், ஆனால் சுமார் மூன்று மாதங்களின் பின்னர் இவர் 'எனது தேசிய சிந்தனைக்குடி. எஸ். கொள்கைகள் ஒத்து வரமாட்டாது என தெரிவித்து கட்சியை விட்டு வெளியேறியமையும் குறிப்பிடத்தக்கது

## சேர் ஜோன் - டட்லி

1952-ம் ஆண்டு டி. எஸ். சேனாநாயக்கா மரணமடைந்ததைத் தொடர்ந்து சேர். ஜோன் கொத்தலாவலைக்கும் டட்லி சேனாநாயக்காவுக்கும் இடையே மறைமுகமாக கட்சிதலைமையைப் பற்றும் போட்டி இருந்தது இதற்கு டட்லி சேனநாயக்காவுக்கு ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் தலைமையிலான காங்கிரஸ் கட்சி முழுமையான ஆதரவை வழங்கியது ஆனால் டட்லி அரசியலில் எவ்வளவு தூரம் பிரகாசிக்காமையினால் சேர். ஜோன் கொத்தலாவலை பிரதமர் ஆனார் இதன் பின்னர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அந்நிலையில் இருந்து ஒதுங்கி கொண்டார். காலப்போக்கில் சேர். ஜோன் பல பௌத்த பிக்குகளினதும், மற்றும் கட்சி உறுப்பினர்களிடையே எதிர்ப்புகளைச் சம்பாதித்துக் கொண்டமையினால் தொடர்ந்து டட்லி சேனாநாயக்கா தலைமைபதவியை ஏற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது.

சேர். ஜோன். கொத்தலாவலைக்குப் பின்னர் தனக்கு கட்சிதலைமை பதவியும் பிரதமர் பதவியும் கிடைக்கும் என எதிர்பார்க்க ஜே. ஆர். ஜயவர்தனா ஆத்திரம் அடைந்து தனக்கு என்று ஒரு குழுவை அமைத்து கட்சிக்கூட்டத்தை கூட்டுமாறு டட்லியிடம்அழைப்பு விடுத்தார் டட்லி சேனாநாயக்கா கூட்டத்தை அந்த கட்டத்தில் கூட்ட தயாராக இருக்கவில்லை. ஜே. ஆர். வெளிநாட்டுக்கு பயணம் ஒன்றைமேற்கொண்டுள்ளவேளை கட்சி கூட்டத்தை கூட்டினார் இதனால் ஆத்திரம் அடைந்த ஜே. ஆர். ஆதரவாளர்கள் கூட்டத்தை முழுமையாகப் பகிஷ்கரிக்கத் தயாரானார்கள். இது மட்டும் அன்றி ஜே. ஆருக்கு தொலைபேசி அழைப்பிதழ் அனுப்பப்பட்டு உடன் வருமாறும் வேண்டுகோள் விடுத்தனர். இதே வேளை ஜே. ஆர். இல்லாமல் கட்சிக் கூட்டம் கூட்டப்படுமானால் தாம் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகத் தெரிவித்தனர். இந்தப் பதற்றத்தின் மத்தியில் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட டட்லி தயாராக இருக்கவில்லை. ஆகவே கட்சிக் கூட்டம் ஒத்திப் போடப்பட்டது.

ஜே. ஆர். நாடு திரும்பிய பின்னர் கட்சி சிரேஷ்ட உறுப்பினர் பல கட்டப் பேச்சுக்களை நடத்தினர். இறுதியில் கட்சிக் கூட்டத்தின் திகதி குறிப்பிடப்பட்டது. டட்லி - ஜே. ஆர். இருவரும் தமக்கு ஆதரவு தேடி தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டனர். கட்சிக் கூட்டம் பெரும் பரபரப்பான சூழ்நிலையில் ஆரம்பமானது. ஜே. ஆர். தனது ஆதரவாளர் இடையே இனம் காணும் பொருட்டு சின்னம் ஒன்றை அடையாளமாகக் கொண்டு வருமாறும் கட்சி கூட்டத்தில் சண்டை உச்சக்கட்டத்தை அடையும்போது அதனை அணிந்து கொள்ளுமாறும் தமக்கு ஆதரவான உறுப்பினர்கள் கோஷிக் கொள்கைத் தடுக்கும் நோக்குடன் இந் நடவடிக்கை செய்தார். இவர் எதிர்பார்த்ததுபோல் கட்சிக் கூட்டம் குழப்பம் அடைந்தது- கட்சி உறுப்பினர் இடையே கைகலப்பு ஏற்பட்டது- பலர் காயங்கள் அடைந்த நிலையிலும், மயங்கிய நிலையிலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்- பொலிஸாரினால் கட்சி காரியாலயம், சீல் வைக்கப்பட்டது-

இந்த நிலையைத் தொடர்ந்து கட்சி பல விழுக்காடுகளைச் சந்தித்துக் கொண்டு இருந்தது, டட்லியுடன் சேர்ந்து பிரேமதாசா கட்சியில் இயங்கினார். 1974ஆம் ஆண்டு டட்லி - பிரேமதாசாவுக்கும் இடையே கருத்து வேற்றுமை உருவாகியதைத் தொடர்ந்து பிரேமதாசா கட்சியை விட்டு தான் வெளியேறுவதாகக்கூறிவிட்டுவெளி நாட்டுக்குச் சென்று விட்டார். இதனை அடுத்து டட்லியும் மரணமடைந்தார். பிரேமதாசாவின் இம் முடிவால் உண்டான அதிர்ச்சியினால்தான் டட்லிசேனநாயக்கா மரணம் அடைந்ததாக சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன

## ஜே. ஆர்-பிரேமா அணிதிரட்டல்:

டட்லியின் மறைவைதொடர்ந்து ருக்மன் சேனநாயக்கா அரசியலில்பிரவேசிக்கஆயத்தமானதை தொடர்ந்து பீதி அடைந்தஜேஆர்பிரேமதாசா ஆகியோர் அவரைவெளியேற்றுவதற்கான பல முயற்சிகளில் ஈடுபட்டனர் இதனை தொடர்ந்து எதிர்ப்புக்கு முகம் கொடுக்க முடியாத சூழ் நிலையில் ருக்மன் சேனநாயக்கா கட்சியை விட்டு வெளியேறி டட்லி பெரமுனை என்னும் கட்சியை அமைத்துக்கொண்டார்

இதனைத்தொடர்ந்துகட்சித் தலைமைப்பதவியை ஜே-ஆர் ஏற்றுக் கொண்டு வழிநடத்த தொடங்கிய போதும் பிரேமதாசா செல்வாக்கு மக்கள் மத்தியில் கணிசமான அளவில் அதிகரித்து வந்தது- இது தனக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் எனக்கருதிய ஜே-ஆர் ஜெயவர்த்தனா கட்சியில் தனக்கென அணிஒன்றை உருவாக்க முற்பட்டார் காமினி திசநாயக்கா,லலித் அத்துலத்முதலி, ரொனிடி மெல் ஆகியோரை இதில் இணைத்துக் கொண்டார் இந் நடவடிக்கையினால்பாதிக்கப்பட்ட பிரேமதாசா தனக்கும் கட்சியில் அணிஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார் சிறிசேன குரே, ரட்ண சிறி ராஜபக்ச, வீரசிங்க மல்லிமாரட்சி ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோர் இவரது அணியில் இருந்தனர் ஜே ஆர் ஆட்சிக்காலத்தில் வடக்கு கிழக்கில் ஏற்பட்ட ஆயுதப் போராட்டமும், இதனை அடக்கும் முகமாக இந்திய இராணுவத்தை அவர் அழைத்தமையையும் தொடர்ந்து தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பும், பீதியும்காரணமாக ஜே-ஆர் வாரிசுகள் பதவியை ஏற்கத் தயங்கினர் இதனை தொடர்ந்து பிரேமதாசா விடம் தலைமைப் பதவி திணிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பிரேமதாசாதென்னிலங்கை கொந்தளிப்பை அடக்க எடுத்த முயற்சியானது பல ஆயிரக்கணக்கான உயிர்களைப்பலி எடுத்ததன் பின்னரே ஓய்ந்தது

இதன் பின்னர் ஜே. ஆர் அரசியல்வாரிசுகள்தமக்குரிய உரிய இடம் வழங்க வேண்டும் என்ற வகையில் கட்சிக்குள் பிரச்சினை தோற்றுவித்தனர். இதனை தொடர்ந்து இவர்கள் கட்சியில் இருந்து பிரேமதாசாவினால் மறைமுகமாக வெளியேற்ற முற்படுகையில், அவர்களாகவே வெளியேறினார்கள்.

பிரேமதாசாவின் மறைவை தொடர்ந்து சற்றும் எதிர்பார்க்காத வகையில் டி. பி. க்கு தலைமை பதவி கிடைத்தது. இதைத் தொடர்ந்து ஜே. ஆரின் ஆலோசனை கேட்க வேண்டிய நிலை புதிய ஜனாதிபதிக்கு ஏற்பட்டது. தனது வாரிசுக்களை மீண்டும் கட்சிக்குள் அரவணைக்குமாறு டி. பி யிடம் ஜே. ஆர். வேண்டுகோள் விடுத்தார். அதனை டி. பி யும் செவிமடுத்தார் சிலநடவடிக்கைகளையும் எடுத்தார். இதேசமயம் பிரேமதாசா அணியினரும், பிரேமதாசாவின் சாதனைகளும் கொள்கைகளும் புறக்கணிப்பும், இருட்டடிப்பும் செய்யப்பட்டன.

தென்மாகாணசபை ஐ தே கவின்தோல்வியைதொடர்ந்து அக்கட்சியின் தலைமைப்பீடம் ஆட்டம்காண தொடங்கிவிட்டது. இதனை அடுத்து பிரேமதாசாவின் வாரிசாக கருதப்பட்டவர்கள் டி. பி,யின் கொள்கைக்கு கிடைத்த பரிசு இதுவென்றும் இதில் பிரேமதாசாவின் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவரினால் கட்சி துரோகிகளாக கருதப்பட்டவர்களை மீண்டும் இணைப்பதுஎன்பதைமக்கள் ஏற்றுகொள்ளமாட்டார்கள் என்று வெளிப்படையாக பிரசாரப்படுத்தத் தொடங்கிவிட்டனர்.

இதனைத் தொடர்ந்து தற்போது பிரேமதாசாவின் கொள்கைகளை உடனடியாக அமுல்படுத்த கட்சி கொள்கை அளவில் தீர்மானித்துள்ளதாக தெரிய வருகின்றது

ஐக்கிய தேசியக் கட்சி இதுவரை இருவரின் கொள்கையின் கீழ்தான்மக்கள்மத்தியில்செல்வாக்கு பெற்று இருந்ததாகவும், முதலில் டி. எஸ். சேனநாயக்காவும், அவரின் பின்னர் பிரேமதாசாவின் கொள்கையினால் தான் வழி நடத்தப்பட்டு வருவதாவும் எனவே அவரின் கொள்கைகளை மறைத்தால் மக்கள் கொடுக்கும் தண்டனையானது மிகவும் கடுமையானதாக இருக்கும்'' என சிறிலங்கா மக்கள் கட்சி தலைவர் ஒஸி அபேகுணசேகர ஐ தே. க; மாநாட்டில் உரையாற்றுகையில் பலத்த கரகோசத்தின் மத்தியில் குறிப்பிட்டார் என்பது சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

எனவே ஐ தே. க. பிளவுகளும், பலவீனங்களும் மக்களால் அவர்கள் புறக்கணிக்கப்படும்போதுதான் உச்சக் கட்டத்தை அடைந்து விடுவது வழக்கமாக உள்ளது. ஏனைய கட்சிகளில் பிளவு இருப்பதாகத் தெரிவிக்கும் இக்கட்சி இன்று தனது கட்சிப் பிளவைக் கூட ஓரளவு மௌனமாக ஏற்றுக் கொள்ளுகின்றது என்றே கொள்ள வேண்டும்.

எனவே ஐ தே. க. எதிர்காலம் என்பது இக் கட்சி மாநாட்டுக் கூட்டத் தொடருடன் நிர்ணயிக்கப்படவில்லை என்றும் மாநாட்டின் பின்னரும் எந்த நேரமும் பிளவுபடும் ஒரு நிலை தோன்றக்கூடும் என்றே பரவலாக நம்பப்படுகின்றது-

## முக்கிய அறிவித்தல்

வடபிராந்திய வர்த்தக சங்கங்களின் சமாசம்

எதிர்வரும் சித்திரை புத்தாண்டு வருடப்பிறப்பை முன்னிட்டு நாளை 9-4-1994 சனிக்கிழமையும் 10 - 4 - 1994 ஞாயிற்றுக் கிழமையும் சகல வியாபார நிலையங்களும் முழுமையாக திறந்து வியாபாரம் செய்யலாம் என அன்புடன் அறியத்தருகின்றோம்,

நன்றி

செயலாளர்

(இ- 9050)

---

## புதிய உயர் கல்லூரி

(ஆரியகுளம் சந்தி)
யாழ்ப்பாணம்.

# O/L

DAY CLASSES

பகல்நேர வகுப்புக்கள் ஆரம்பம்;
11-04.94 திங்கள்
காலை 8-00 மணி
(வகுப்புக்கள் 4நாட்கள் நடைபெறும்)

(இ-9033)

---

உங்கள் ஆடைத் தேவைகளை
விரைவாக பூர்த்தி செய்ய

புதிதாக அமைகிறான்

# யோகாமணி ஆடை அகம்

(யோகாஸ் ஆடை அகம்)

இன்றைய நாகரிகத்தோடு இணைந்த
இயற்கை எழிலூட்டும் பலவர்ண

★ பட்டாடைகள் ★ ஜவுளித்தினுசுகள்
★ சேட், ஜீன்ஸ் ★ வேட்டி சால்வைகள்

மற்றும்

சிறுவர்களுக்கான ரெடிமேற் அயிட்டங்கள்
புதுப்புது டிசைன்களில் தெரிவு செய்து
நீங்கள் பெற்றிட

## மறவாது விரைந்து நாடுங்கள்

# யோகாமணி ஆடை அகம்

16B, பெரியகடை, யாழ்ப்பாணம்.

குறிப்பு: இத்தாபனம் 21 - 4 - 1994 தொடக்கம் இல 32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேம்.

(சி-9019)

---

## பனை எமது சொத்து

- எமது இயற்கை வளங்களில் ஒன்று பனை
- தமிழீழ வளத்தின் குறியீட்டுச் சின்னம் பனை
- பல்லாயிரம் பேர்களுக்கு தொழில் வழங்குவது பனை
- பலவித பயன்களை வழங்குவது பனை
- மண்ணரிப்பைத் தடுப்பது பனை
- மழை பெய்விப்பது பனை
- நீண்டகாலம் பயனளிக்கும் சீனிமரம் பனை
- அந்நியச் செலாவணி அளிக்கக்கூடியது பனை
- பல வருடங்கள் பயனளிக்கக்கூடியது பனை

எனவே

பனையைத் தறியாதீர்
அனுமதியின்றிப் பனை தறித்தால்
தறிக்கப்பட்ட ஒவ்வொரு பனைக்கும்
1000 ரூபா வீதம்
அபராதம் விதிக்கப்படும்

அனுமதியின்றிப் பனை தறிப்போர் பற்றிய விபரத்தை அண்மையில் உள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வட்டத் தொடர்பாளர் செயலகத்தில், அல்லது அரசியல்துறை வட்டப் பொறுப்பாளர் செயலகத்தில், அல்லது காவல்துறையினரிடம் தெரியப்படுத்துங்கள்.

பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-9001)

---

ஆத்மஜோதி நா. முத்தையா
அவர்களுக்குப்

## பாராட்டு விழா

09.04.94 சனிக்கிழமை காலை 9.30க்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ''மாணவர்க்கேற்ற மாண்புறு கதைகள்'' நூல் வெளியீடும், நூலாசிரியர் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களுக்குப் பாராட்டு விழாவும் இடம்பெறும்

அனைவரும் அன்புடன்
அழைக்கப்படுகின்றனர்.

(7969) ''விழா நிர்வாகிகள்''

---

## கலை வர்த்தக கல்லூரி

(C. C: A.)

வெலிங்டன் சந்திக்கருகாமை,
யாழ்ப்பாணம்.

கலை வர்த்தக வகுப்புக்கள்

# G. C E A/L - 96

ஆரம்பம்: 09-04-94
காலை 8 மணி
சனி, ஞாயிறு வகுப்புக்கள்

ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பொருளியல் | திரு. உதயன் |
| கணக்கியல் | திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | திரு. இரட்ணம் |
| அளவையியல் | திரு. சயந்தன் |
| இந்துநாகரிகம்) | |
| இந்துசமயம் ) | திரு. ஜோதீஸ்வரன் |
| புவியியல் | திரு. வேலா |
| தமிழ் | திரு. தங்கராஜா |
| அரசியல் | திரு. பஞ்சு |
| கிறிஸ்தவநாகரிகம் | திரு. நோபேட் |

குறிப்புக்கள்:

(1) மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளதால் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்

(2) மாதாந்த பரீட்சை மூலம் மாணவர் திறமை மதிப்பீடு செய்து வழிநடாத்தப்படும்;

(இ-9034) -நிர்வாகி

நூலகம் மன்றம் யாழ்ப்பாணம்

# கோமல் சுவாமிநாதனுடன் ஒரு சந்திப்பு

கோமல் சுவாமிநாதன் தமிழ் நாடக உலகுடன் நெருக்கமான பரிச்சயமுடையவர். திரைப்படத் துறை மூலமும் அவர் அறிமுகமாயிருக்கிறார்; அனல் காற்று, ஓர் இந்தியக் கனவு திரைக் கதைகளை எழுதி இயக்கியுள்ளார்; தண்ணீர் தண்ணீர் படத்தின் கதாசிரியர்; இப்போது அவர் ஈடுபட்டிருப்பது இதழியல் துறை; கடந்த மூன்று வருடங்களாக ஸ்ரீராம் நிறுவனம் நடத்தும் சுபமங்களாவின் ஆசிரியர்; அவரைச் சுபாஸ் பயணிகள் விடுதியில் சந்தித்தபோது, அன்றைய ஈழநாதம் பத்திரிகையைக் காட்டி,

அவர்—

''இந்தியா தான் எடுத்த முடிவிற்கு ஒருநாள் பதில் சொல்ல வேண்டும் என்பது ஒரு கடுமையான ஸ்டேட்மென்ட் (கூற்று); அதை நீங்கள் கான்டெக்ஸ்ஸில் (சந்தர்ப்பம்) இருந்து தனியாகப் போடவில்லையா? இங்கு இருக்கிற நிலைமை வேறு. என்னுடைய நிலைமை வேறு; அதுதான்; வேறொன்றுமில்லை; நீங்கள் எனது ஸ்டேட்மென்டை (கூற்று) முதன்மைப்படுத்திப் போடுவது வேறு; நான் சொன்ன ஸ்டேட்மென்டை இல்லை என்று மறுக்கல்ல. அதற்குத் தலைப்புக் கொடுத்திருப்பது, இந்த விஷயத்தைப் பற்றி மாத்திரமே நான் பேசியிருக்கிறேன் என்பது மாதிரி; பத்திரிகை, தங்களுடைய பக்கத்தில் இருந்துதான் முக்கியத்துவம் கொடுக்கும். இப்போது இந்தியாவில் உள்ள நிலைமைகளை வைச்சுச் சொல்கிறேன்; அங்கு போனால் சில கஷ்டங்கள் வரும்; முன்னர் எல்லாம் பிரச்சினை இல்லை. நான் யாழ்ப்பாணம் வந்தது பற்றிப் பலவிதமான கேள்விகள் என்னிடம் கேட்கப்படலாம்'' என்றார்.

கோமல் சுவாமிநாதனிடம் கேட்கப்பட்ட கேள்விகளும், அதற்கு அவர்கள் அளித்த பதில்களும்;

○ ஒரே சமயத்தில் நாடகம், திரைப்படம் மற்றும் அச்சுவழி தொடர்புத் துறைகளில் நீங்கள் ஈடுபடுவுள்ளீர்கள். மூன்றினிற்கிடையே முனைப்பாக இருப்பது எது? எந்த ஊடகம் மூலம் தமிழ் நாட்டு மக்களை இலகுவில் அணுகலாம் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

ஃ திரைப்படம்தான் சக்தி வாய்ந்தது; திரைப்படம் என்பது மிகவும் சக்திவாய்ந்த ஊடகம்' அதனை ஒரு எளிமையான ஊடகம் என்றும் சொல்ல முடியாது. ஆனால் அதன்மூலம் வெகுவிரைவிலேயே எல்லா விஷயங்களையும் அடையமுடியும் என்று ஒரு நிலை இருக்கிறது; அதனால் இந்த ஊடகத்தின் சக்தி, என்னைப் பொறுத்தவரை தமிழ்நாட்டு மக்களை அணுகுவதற்கு ஒரு சிறந்த சாதனம். இனி, நான் ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வொன்றில் முனைப்பாக இருந்தேன், இப்போது பத்திரிகையில் தான் முனைப்பாக இருக்கிறேன். சினிமாத் துறையில் இரண்டு, மூன்று படங்கள் எடுத்தேன் பிறகு சினிமாப் படங்களில் எனக்கு டிமான்ட் (வரவேற்பு) இல்லை; அந்த நேரங்களில் நாடகங்களில் மினக்கெட்டேன்; இப்போது சுபமங்களாவில் கவனம்செலுத்துகிறேன். ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு துறையில் மினக்கெடுகிறேன்;

○ சுபமங்களாவில் ஆசிரியர் பொறுப்பை நீங்கள் ஏற்று மூன்று வருடங்கள் ஆகின்றன. உங்கள் பத்திரிகையின் சாதனை என்ன?

ஃ சாதனையை நான் எப்படிச் சொல்லமுடியும். நீங்கள் தான் சொல்லமுடியும்; பத்திரிகை நடத்துவதும் ஒரு சாதனைதான். இலக்கியப் பத்திரிகையை தரமாக நடத்துவதே ஒரு சாதனை என்று சொல்லுவேன்; இதைத்தாண்டி இலக்கிய சாதனைகள் வேறென்ன பண்ணியிருக்கிறேன் என்பதை வாசகர்கள்தான் கணிக்க வேண்டும்.

○ சுபமங்களாவுக்குப் பன்முகப்பட்ட வீச்சு இருக்கின்றது; ஆனாலும், அந்த இதழை நடத்தும் ஸ்ரீராம் நிறுவனத்தின் நோக்கு என்ன என்று கூறுங்கள்?

ஃ அவர்கள் தங்களுடைய பத்திரிகையை என்னிடம் ஒப்படைத்தார்கள்; என்னுடைய இலக்கிய நோக்குகளுக்குத் தடை போடாமல் விடுகிறார்கள்; அவ்வளவுதான்; ஓர் இலக்கிய சஞ்சிகையை வளர்த்துப் பார்க்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள்; முதலில் ஒரு சினிமாச் சஞ்சிகை போலத்தான் சுபமங்களா இருந்தது. அப்புறந்தான் சமூகத்துக்குப் பயனுள்ளதாகச் செய்ய விரும்பினார்கள். அப்போதுதான் அதன் ஆசிரியராகப் பொறுப்பேற்றேன்; நான் ஸ்ரீராம் நிறுவனத்தினரின் நண்பன்.

○ தமிழ்நாட்டில் மூலதன வசதியுடைய பெரும் பத்திரிகை நிறுவனங்கள், வர்த்தக நோக்கில் சிறு பத்திரிகைகளை வெளியிட்டு, இலட்சிய நோக்கில் தற்பணியாற்றும் சிறு பத்திரிகைகளை நசுக்குகின்றன என்று ஒரு பார்வை உள்ளது; இதுபற்றி உங்கள் கருத்து-

ஃ நான் ஒப்புக்கொள்ளவில்லை. அந்த மாதிரியாக ஒன்றுமில்லை; அப்படியொரு சிஸ்ரமற்றிக்காக (ஒழுங்காக) நசுக்குகிறது என்று இல்லை; ஏதேச்சையாக ஏதோ இரண்டு ஒன்று நடந்திருக்கலாம் அல்லது அவற்றின் பலவீனமாக இருக்கலாம் தற்செயலாக ஒன்று இரண்டு நடந்திருக்கலாமே தவிர வர்த்தக பத்திரிகைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து சிறு பத்திரிகைகளை ஒதுக்கியதாக இல்லை சுபமங்களாவை நடத்தும் ஸ்ரீராம் நிறுவனம் ஒரு நிதிநிறுவனம்; அது மற்றச் சிறு பத்திரிகைகளை நசுக்குவதில்லை

○ ஈழத்து எழுத்தாளரின் எழுத்துகள் பல தமிழ் நாட்டில் வெளிவருகின்றன; இந்த எழுத்துக்கும் தமிழ் நாட்டு எழுத்துக்கும் தரம் எப்படி என்று நீங்கள் மதிப்பிடுகிறீர்கள்?

ஃ தரம் என்பதைப் பொறுத்தவரை ஈழத்து எழுத்தாளர்களின் பல நல்ல கதைகள் தமிழ் நாட்டில் வெளிவருகின்றன; அது மாதிரித் தமிழ் நாட்டிலும் வெளிவருகின்றன; இரு தரப்பிலும் தரமில்லாத கதைகளும் வெளிவரும். குறிப்பிட்ட ஒரு கால கட்டத்தை எடுத்துக்கொண்டு எது தரம், எது தரமில்லை என்று ஒப்பாய்வு நோக்கில் தான் சொல்ல முடியும். எப்ப, எந்தக் கதைகள் ஆக்கப்பட்டவை என்றால் தான் சொல்ல முடியும்; இரண்டிலுமே தரம், தரமில்லாதவை உள்ளன; இந்தக்கால கட்டத்தில் ஈழப் பிரச்சினை பற்றி எழுதுகின்ற கதைகள் கொஞ்சம் தமிழ் நாட்டைவிடக் கூடுதலான தரமாக இருக்கும்;

○ சென்னையின் வாழ்க்கைச்சூழல், சமுதாயநிலை ஆகியவற்றிலிருந்து வெளிவரும் ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகள் ஈழத்து மண்ணில் வேர் விட்டுத் தழைக்க முடியுமா?

ஃ அதனை இங்குள்ள (இலங்கை) விமர்சகர்கள் தான் சொல்ல வேண்டும்; பதிவு சரியாக இருந்தால் சூழல் எங்கிருந்தாலென்ன? பத்து வருஷத்துக்கு முந்திய சமாச்சாரங்களை இப்போது சென்னையில் தங்கியிருக்கும் ஈழத் தமிழ் எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள்; இப்போதைய சமாச்சாரங்களை அடுத்த தலைமுறை எழுத்தாளர்கள் எழுத வேண்டியதுதான் இங்குள்ள சூழ்நிலைக்கு ஒரு யதார்த்தம் இருக்கிறது. அது எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை இங்குள்ள மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும். இங்குள்ள சூழ்நிலையை இப்போதுதான் நான் படித்துக் கொண்டிருக்கிறேன்; இந்தச் சூழ்நிலைக்கு ஏற்றதாக அந்தக் கதைகள் இருக்கின்றனவா என்பதினை இனிமேல் தான் ஒப்பாய்வு செய்தல் வேண்டும்.

○ உங்களுக்குப் பரிச்சயமான அளவில் ஈழத்துக் கலை - இலக்கியம் பற்றி உங்கள் பொதுவான கருத்தென்ன?

ஃ எனக்குப் பரிச்சயமான அளவில் பொதுவான கருத்து என்னவென்றால், ஒரு யதார்த்தமான சூழ்நிலையில் இருக்கின்ற மக்களுக்கு உரிய பண்புகளை வெளியிடக்கூடிய ஒரு வடிவமாகக் கலை - இலக்கியங்கள் அமைந்துள்ளன. வருகிற சிறுகதைகளை எல்லாம் நிறையப்படித்திருக்கிறேன்; டொமினிக் ஜீவாவை எல்லாம் அந்தக் காலத்திலேயே படித்திருக்கிறேன்; சட்டநாதர் கதைகள் படிக்கவில்லை. நேற்றுக் கூடச் சொன்னார்கள் சட்டநாதர் பற்றி இப்பதான் கேள்விப்படுகிறேன்; வாசிக்க கிடைக்கவில்லை. பேராசிரியர் சிவத்தம்பி ஒரு எழுத்தாளரின் பெயரை குறிப்பிட்டுக் கூறினார், இங்கு ரொம்ப நல்லாய் எழுதுகிறார்கள், பூரணமாக நான் ஈழத்து இலக்கியங்களைப் படிக்கவில்லை. பூரணமாகப் படிப்பது என்பது கஷ்டம்தானே?

○ மகாராஷ்டிரத்தில் சிறுபான்மையினரின் குரலாக ஒலிக்கும் தலித் இலக்கியத்திற்கும் ஈழத்துப் படைப்புகளுக்குமிடையில் வாழ்வியல் நோக்கில் ஏதாவது பொதுத் தன்மையை உங்களால் காண முடிகின்றதா?

ஃ தலித்இலக்கியம் முற்றிலுமாக ஒரு வேறானநிலை; அது ஜாதி சம்பந்தப்பட்ட ஒரு கலாசார அடக்குமுறையின் வெளிப்பாடு; ஈழத்து இலக்கியம் அந்த ஜாதி அடக்குமுறை மாத்திரமல்ல. பல முறையான அடக்குமுறை சம்பந்தப்பட்ட விஷயம். ஐயாயிரம் வருடங்களாக ஜாதி அடக்குமுறை உள்ள மகாராஷ்டிர சமுதாயத்தில் கலாசார ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களின் இலக்கியம்; தலித் இலக்கியம், - ஆகவே தலித் என்பது அங்கு வேறொரு கோலம்; பண்பாட்டு அடக்குமுறை இலங்கையில் இருந்தாலும் கூட அதைவிட முக்கியமான பல அடக்குமுறைகள் இங்கு இருக்கின்றன; இன ரீதியான அடக்குமுறை உள்ளது; தமிழ் நாட்டிலும் ஜாதி ரீதியான சிக்கல்கள் உள்ளன; ஒருபண்பாட்டுக் கோலம் என்று பார்க்கப் போனால் கே. டானியல்தான் முதல் தலித் எழுத்தாளர் மாதிரி; அது ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம்; எனக்கு இங்குள்ள இலக்கியத்துக்கும், தலித் இலக்கியத்துக்கும் வித்தியாசத்தைக் காண முடிகிறது. ஒற்றுமையைக் காண முடியவில்லை- தலித் இலக்கியம் வேறு. தலித் இலக்கியம் வேறு நோக்கங்களையும், போக்குகளையும், அனுபவங்களையும் கொண்டதாக இருக்கிறது. இங்குள்ள இலக்கியம் வேறு; அனுபவங்களையும், போக்குகளையும் கொண்டதாக உள்ளது;

○ ''தமிழ் எழுத்தாளர்கள் பாரதி சொன்ன 'ரௌத்திரம்' பழக வேண்டாமோ? சுயம் கலந்த வெறும் கோபமாக அது இல்லாமல் சமூகம் சார்ந்த தர்மீக ரௌத்திரமாக அது மாற வேண்டாமா?'' என்று பெப்ரவரி 1994 சுபமங்களா தலையங்கத்தில் உங்கள் குரல் ஓங்கி ஒலிக்கிறது. அதற்கு என்ன செய்யலாம் என்று கூறுங்கள்,

ஃ இலக்கியச் சந்திப்புகள், இலக்கியப் பாவனைகள் மற்றும் இலக்கியத் தொடர்புகள் அமைத்துக் கொள்வது ஒன்று; இங்குள்ளவர் அங்கு செல்வது அங்குள்ளவர்கள் இங்கு வருவது; இலக்கியச் சிந்தனையாளர்கள் எல்லாம் பரந்துபட்ட தளத்தில் ஒன்று சேர்ந்து தங்க நடவடிக்கை பற்றிப் பேசுவது; அதைப் பற்றி விவாதிப்பது; இலக்கியம் சார்ந்த நல்ல விஷயங்களை ஒட்டுமொத்தமாக விமர்சிப்பது. பின்னர் அதை மக்களிடம் எடுத்துச் செல்வது. இந்த மாதிரியான விஷயங்களைத் தான் இந்தக் காலகட்டத்தில் செய்யமுடியும். இந்த ரௌத்திரம் ஈழத்தமிழர் சார்ந்ததாகவும் இருக்கும்.

○ நாடகம்பற்றிஒருகேள்வி, தமிழ் நாட்டில் முத்துசாமி கூத்துக்களுக்கு பரத நாட்டிய வடிவத்தைக் கொடுத்து உயர்களுக்கான மேடைப் படுத்துகிறார். இது ஏற்புடையது என்று கருதுகிறீர்களா?

ஃ இது பற்றி எனக்குக் கருத்து வேறுபாடுகள். பழைய வடிவத்தை அப்படியே விடுவதா, அல்லது பழைய வடிவத்தைப் புதிய வடிவம் ஆக்குவதா என்பது பற்றிய பிரச்சினை உண்டு, என்னைப் பொறுத்த வரையில் பழைய வடிவத்துடன் புதிய வடிவங்களை மிக்ஸ் (கலக்காமல்) இருப்பதே நன்று. பழைய கூத்துக்களுக்கு ஐயாயிரம் மக்கள் வரை கூடுகின்றார்கள்; புதிய நாடகங்களுக்கும் குறைந்த அளவு பார்வையாளர்;

○ ஈழத்தமிழ் மக்களின் அவலங்கள் மற்றும் இந்திய இராணுவம் ஏற்படுத்திய வடுக்கள் சுபமங்களா மூலம் தமிழ்நாட்டு மக்களை எட்ட வேண்டும் என்றும், அவை கலைவடிவம் பெறவேண்டும் என்று இங்குள்ள மக்கள் விரும்புகிறார்கள். குறிப்பிட்ட இந்த உணர்வை வெளிப்படுத்துவீர்களா?

ஃ எழுதுவதா, எழுதுவதில்லையா என்பது பிரச்சினை இல்லை; எழுதுவனா, எழுத மாட்டேனே என்று சொல்ல மாட்டேன், இது அரசியல் சார்ந்த கேள்வி; அதுபற்றி இப்போது நான் பதில் சொல்லப் போவதில்லை.

○ அப்படியானால் சுபமங்களா தலையங்கத்தில் நீங்கள் எழுதிய பாரதியின் 'ரௌத்திரம்' என்னாவது? "தமிழ்க்குரல் ஓங்கி ஒலிக்க வேண்டாமா?''

ஃ இது என்னைஎக்ஸ்போஸ் (வெளிப்படுத்த) பண்ணுறதுக்குக் கேட்ட கேள்வி: அங்கு போனால்தான் தெரியும்; நாடு எப்படி இருக்கிறது, அரசியல் சூழ்நிலை எப்படி உள்ளது என்று நான் புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்குப் புரிந்து கொண்டிருக்கிறேன்; இந்த 'ரௌத்திரம்' பற்றிச் சொன்னீர்களே, அந்தத் தலையங்கம் - அதுபற்றி எல்லாம் இங்கு இழுக்கக் கூடாது. அங்கு போய் நிலைமையைப் பார்த்துத்தான் எழுதுவேன். இந்தியாவில் உள்ள சூழ்நிலை உங்களுக்குத் தெரியாது. ஆனால் கலை வடிவங்கள் செய்யலாம்; சினிமா எல்லாம் என் கையில் இல்லை. சினிமாவில் போய் எல்லாம் பெரிய மாற்றத்தைச் செய்ய முடியாது நான் ரொம்பச்சாதாரண மனிதன் நான் மெசையா (இரட்சகர்) அல்ல இருபதாயிரம்பிரதிகள் வெளிவருகிற ஒரு பத்திரிகையின் ஆசிரியர் பத்திரிகையில் தான் ஏதாவது செய்ய முடியும். படமெல்லாம் எடுக்க முடியாது; நாடகத்தில் கருத்து வெளியிடுவதை என்னால் செய்ய முடியும்;

○ ஒரு முற்போக்கு வாதி என்றவகையில்வியட்நாம் போராட்டத்தை ஆதரித்ததைப்போல, பாலத்தீனியர் போராட்டத்தை ஆதரித்து வருவதைப்போல, பக்கத்திலிருக்கும் எமது நாட்டின் விடுதலைப் போராட்டத்தை இந்திய முற்போக்கு வாதிகள் எமது மக்கள் நடத்தும் போராட்டத்தை ஆதரிக்க மாட்டார்களா என்ற ஆதங்கம் எமது மக்களுக்கு உண்டு. இது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

ஃ தமிழர்கள் பிரச்சினை பற்றி பலவிதமான குழப்பங்கள் பலவிதமான பிரச்சினைகள் பலவித அபிப்பிராயங்கள் எல்லாமே இருந்தது; எனினும் ஈழத்தமிழர்கள் கொடுமைப் படுத்தப்படுகிறார்கள் என்பது பற்றி எந்த வித அபிப்பிராய பேதமுமில்லை; எனினும் இதன்பின்னணியிலுள்ள அரசியல்பற்றி பலவித குழப்பங்கள் இன்னமும் நீடிக்கவே செய்கிறது; இதனால் சிலபேர் என்ன நிலைப்பாடு எடுப்பது எனத் தெரியாமல் தடுமாறுகின்றனர்; என்னைப் பொறுத்தவரை நான்கூட அந்த நிலைப்பாட்டில் தான் இருந்தேன்; எந்த வடிவத்தில் எந்த அரசியல் பின்னணியில் பார்ப்பது என்பதில் குழப்பம் இருந்தது எனினும் இங்கு மக்கள் படும் துன்பம், துயரம் என்பது எமக்குத் தெரிகிறது இதை முன்னெடுத்துச் செல்கிற அரசியல் எப்படிப்பட்டது என்பதில் தான் குழப்பம் இருக்கிறது; அந்த அடிப்படையில் தான் சில சமயங்களில் பேசாமல் இருக்கவேண்டியதாகிறது;

○ கலை இலக்கியப் படைப்புகளின் போதுகுறிப்பாக தண்ணீர் தண்ணீர் நாடகமாக மேடையேறிய போதும் திரைப்படமாகிய போதும் சில துணிச்சலான கருத்துக்களை முன் வைத்திருக்கிறீர்கள். ஆளும் வர்க்கம் அல்லது ஆட்சியாளரிடமிருந்துகிடைக்கக் கூடிய எதிர்ப்புபற்றி கவலைப்படாமல் துணிச்சலுடன் கருத்துக்களை முன்வைத்து இருந்தீர்கள்; ஆனால் ஈழத்தமிழர் பிரச்சினை பற்றிப் பேசும்போது அந்தத் துணிச்சலை உங்களிடம் காண முடியவில்லையே. ஏன் இந்த அச்சம் ஏற்படுகிறது;

ஃ அச்சம் இருக்கிறது; அது ஏன் என்பது எப்படியென்பது புரியவில்லை; சில அரசியல் நிலைமைகள் புரியவில்லை என்பது ஒருபுறம்; ஈழத்தமிழர் பிரச்சினை பற்றிப் பேச முன்பு எனது நிலையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது இன்னொன்று; அந்த உறுதிப்படுத்தல் இல்லாமல் உங்களுடைய தூண்டுதல் மூலம் அல்லது மற்றவர்களின் நிர்ப்பந்தம் மூலம் நான் பேச

(12ஆம் பக்கம் பார்க்க)

சந்திப்பு: மதன்

## பழசும் புதுசும்

# செல்கென விடுமே

- இளையவன்

இவளது உள்ளத்துணிவு எஃனே. நினைக்கவே அச்சம் தருகின்றதே என்று தொடங்கிபோர்க்களம் நோக்கி தனது சிறுமகனை அனுப்பும் தாய் ஒருத்தியைப் பற்றி ஒக்கூர் மாசாத்தியார் என்னும் புலவரின் பாடல் புறநானூறின் 279-ம் பாடலாக இடம்பெற்றுள்ளது. அப்பாடலில் முன்னர் நடந்த போரில் இவளது தகப்பன் யானையை வென்று அதன் காரணமாக களத்தில் இறந்தான். இவளது கணவன் பசு நிரைகளைக் கவர வந்த எதிரிகளை எதிர்த்துப் போரிட்டு மடிந்தான். இருந்தாலும் என்ன இன்றும் போர்ப்பறை கேட்கிறது. எல்லைகளைக் காக்க வேண்டிய தேவை இருக்கிறது. அதனால் தனது ஒரே மகனான சிறுவனை அழைத்து எண்ணெய் தடவி வேல் கைக் கொடுத்து போர்க்களம் நோக்கி செல்க-என விடுத்தாள் என்பதைக்கூறியுள்ளார். அப்பாடல் வருமாறு அமைகின்றது:

கெடுக சிந்தை கடிது இவள் துணிவே
மூதின் மகளிர் ஆதல் தகுமே
மேல் நாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை
யானை எறிந்து களத்து ஒழிந்தனனே!
நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பெருநிரை விலக்கி ஆண்டுப் பட்டனனே!
இன்றும்
செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல் கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇப்
பாறு மயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கி செல்கென விடுமே!

சுமார் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் எமது விடுதலைப் போராட்டத்திலும் இத்தகைய காட்சிகள் ஆங்காங்கே இல்லாமல் இல்லை. தந்தையும், மைனும் சீருடையுடன் போர்க்களத்தில் நிற்கும் காட்சிகளும், மாவீரர் பட்டியலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தும் - நெருங்கிய உறவினராகவும் இருக்கும் பலர் இடம் பிடித்திருக்கும் செய்திகளும் இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையை எண்ணிப் பார்க்கும் போது இவ்வாறு கூறத் தோன்றுகிறது.

பாசறை வாசலில் வந்த முதியவள்
விசிறிய சொற்களால் துவண்டனர் வீரர்கள்!
முதல் ஈழப் போரில் மூத்தவன் மடிய
இதயமே இல்லா இந்தியப் படையால்
வந்த மருமகன் படுகொலையாக
அநாதிகளாகி பேரக் குழந்தைகள்
அலைதல் ஆகாது என்பதால்
ஆவியை இதுவரை தக்க வைத்திருந்தேன்.
பழிக்குப் பழியென பாலகர் அவர்கள்
களிப்புடன் ஆயுதம் ஏந்திய பின்னரும்
வீட்டினில் எனக்கு என்ன வேலையோ?
நாட்டினிற்காக நானும் வருகிறேன் என்றே
பாசறை வாசலில் வந்த முதியவள்
விசிறிய சொற்களால் நெகிழ்ந்தனர் வீரர்.

O ஒரு பார்வை

# யாழ் - திருமறைக் கலாமன்றம் மேடையேற்றிய "கல்வாரிக் கலம்பகம்"

### (பக்தி, இசை, உரை நாடகம்)

**யாழ்** திருமறைக் கலா மன்றம் தவக்காலத்தை ஒட்டி யேசுக் கிறிஸ்துவின் திருப்பாடுகளைச் சித்திரிக்கும் பக்தி, இசை, உரை நாடகமான '' கல்வாரிக் கலம்பகத்தை'' கடந்த 25ஆம், 26ஆம் 27 ஆம் திகதிகளில் மொத்தம் ஐந்து காட்சிகளை பிரதான வீதி கலை அரங்கில் மேடையேற்றியது.

வழமை போன்று 150 அடி அகல மேடையில் 250 கலைஞர்களின் ஒத்துழைப்புடன் பெரும் பொருள் செலவில் நாடகம்மேடைஏற்றப்பட்டது.

கிறிஸ்துவின் பிறப்பு, வளர்ப்பு, அவரது புதுமைகள், அவரை எதிர்கொள்ளும் பூசல்கள், அதன் காரணமாக கல்வாரி மலையில் அவருக்கு வழங்கப்பட்டபாடுகள், உயிர்த்தல் போன்ற மாமூல் கதையை வருடா வருடம் புதிய கோணத்தில் மன்ற இயக்குநர் பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகளார் பழந்தமிழ் இலக்கியத்துறை போந்து '' சிலுவை உலா '' '' கல்வாரிப்பரணி'' '' கல்வாரிக் கலம்பகம் '' என்னும் நாமகரணங்களில் இலக்கிய நயம் சொட்ட தயாரித்து வழங்கி வந்திருப்பது தெரிந்ததே.

இத்தகைய பெருந்தொகை மாந்தர் ஒரு நிலையில் கூடி ஒரு படைப்பை மேடைக்குக் கொண்டு வருகின்றமுயற்சிகடினமான தொன்றுதான்.

ஒரேநேரத்தில் கட்டுப்பாட்டுடன் இத்தனை கலைஞர்களிடமும் வேலை வாங்குவதென்பது சாதனை தான். அதிலும் நாடகத்தில் பங்கேற்ற மாந்தர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள்.

இம்முறை மேடையேறிய '' கல்வாரிக் கலம்பகம் '' பற்றிப் பார்ப்போம்.

நாடகக் கதையை - வாழ்க்கையில் அனுபவித்த வேதனையின் உச்சத்தில் '' இறைவன் இல்லை '' என்றும் '' இறைவன் இருந்தால் தன்முன் தோன்று'' என்றும் உணர்ச்சி வசப்பட்டு வசை கூறும்ஒருவனுக்கு போதகர் ஒருவர் பைபிள் கதை மூலம்- மனித உருவில் தேவதத்துவத்துடன் யேசு பிறந்த ஒன்றால்- மனிதர்களால் இம்சைப் படுத்தப் பட்ட பாடுகளை கூறுவது போன்று நாடகம் மேடை வருகிறது.

கைப்பாஸ், அண்ணாஸ் அவையில் கூடி யேசுகிறிஸ்து பற்றிய வாதப் பிரதி வாதம் செய்தல் - றோமன் அரச அதிகாரி பிலாத்து முன் யேசுவை நிறுத்தி விசாரணை நடத்தல் ஆகிய இரு காட்சிகளையும் தவிர ஏனைய காட்சிகள் அனைத்தும் இசை, நடனம், பாடல், அபிநயம் ஆகியவற்றினூடே நகர்த்தப் படுவது இந்நாடகத்தில் குறிப்பிடக் கூடிய அம்சமாகும்.

இந்த வகையில் நாடக நெறியாளர் பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகளாருடன் நடன - இசை - பாடல் கலைஞர்களையும் வேலை வாங்கிய நடன நெறியாளர் திருமதி நளாயினி ஞானசீலன் மன்ற இசை அமைப்பாளர் '' இசைத்தென்றல்,'' எம். யேசுதாஸன் ஆகியோரும் பாராட்டுக்கு உரியவர்கள்.

திருப்பாடுகளின் காட்சிகள் முன்னைய நாடகங்களைப் போன்று அல்லாமல் காட்சிப் படுத்தலில் ஒறுப்பனவுகாட்டி பரிசோதனையாக - பாடல், அபிநயம் போன்றவற்றால் சித்திரிந்தமையும் -

பிலாத்துவின் காட்சி உரையாடலில் கையாளப்பட்ட இலகு பேச்சு நடை இல்லாமல் கைப்பாஸ், அண்ணாஸ் சபை உரையாடல் கடுமையாக இருந்ததன் காரணமாக நாடகம் பலருக்கு விளங்க முடியாத ஒன்றாக - திருப்பாடுகளின் அரைப்பகுதி அற்ற படைப்பாக புரிந்து கொள்ள நேர்ந்தமைக்கு யாருமே கவலைப்படத் தேவையில்லை.

எனின் கதை ஒன்றும் புரியாத ஒன்றல்லவே - மாமூல் கதையை தொடர்ந்து நாடக வடிவம் கொடுக்கையில் இத்தகைய பரிசோதனைகள் தேவையாகின்றது.

ஆகவே நுகர்வோன் காலத்துக் கேற்ற வளர்ச்சியுடன் தனது ரசிகத்தன்மை, புரிந்து கொள்ளல் போன்றவற்றை கூட வளர்த்துக் கொள்ளத் தான் வேண்டும்.

மன்றத்தின் ஏனைய நடன நாடகங்களுக்கும் நடன நெறியாளராக திருமதி நளாயினி இருந்தமை காரணமாக அந் நாடகங்களின் நடன முத்திரைகள் குறிசொல்லும் காட்சி நடனத்தைத்தவிர்ந்த ஏனைய காட்சிகளிலும் மலிந்து இருந்தமை தெட்டெனத் தெரிகிறது.

நாடக வடிவம் - மேடையேற்றும் குறியீட்டுப் பாங்கு போன்றவற்றில் அபரிமிதமாகப் புதுமைகளைப் புகுத்தி வருகின்ற இக்கால கட்டத்தில் நடனத்திலும் (கற்பனை வளம் நிறைய இருந்தால்)புதுமைகள் புகுத்தப்பட வேண்டியதும் அவசியமாகின்றது.

இசையிலும் இத்தகைய குறைபாட்டை (நாடகத்திற்கு நாடகம்)நிவர்த்தி செய்ய முயலுதல் வரவேற்கத்தக்கது.

அகல மேடையில் ஒருகாட்சி முடிந்ததும் அடுத்த காட்சி இன்னொரு கோணத்தில் ஆரம்பமாவது - ஏறத்தாழ இரண்டு மணி நேரங்கள் மேடை இடப்பட்ட '' கல்வாரிக் கலம்பகம் '' எதுவித தொய்வும் இன்றி பார்வையாளர்களுக்குநுகரப்பட்டநேரத்தை அரைமணி நேரமாக குறைத்துக் காட்டிய தென்றால் மேற்படி நாடகத்தைத் தயாரித்து மேடையேற்றிய யாழ். திருமறைக் கலாமன்றத்தாருக்கு கிடைத்த பெரும் வெற்றி என்றே கூறலாம் அதேவேளை நாடக வளர்ச்சி என்பது இத்தகைய காட்சிப் படுத்தலில் வெற்றி பெறுவது மட்டுமல்ல நாடகக் கதை - கரு- உரு- உத்தி ஆகியவற்றிலும் மேலோங்கிய நாடகப் பிரதிகளை தமிழில் தோற்றுவிப்பதுமே தமிழ் நாடக வளர்ச்சிக்கு வித்திடும்.

அதற்கு யாழ் - திருமறைக் கலாமன்ற கதை இலாகாவும் முயற்சி எடுக்க வேண்டும்.

- தேவி பரமலிங்கம்

## 'நானும் இன்னும் சிலரும்'

நானோ!
மதில் மீது குந்தி இருக்கிறேன்
என்னோடோ! இன்னும் சிலர்

அவனோ! அந்த சின்னவன் - தினமும்
புன்னகை சிந்தித்திரிவானே! - அவன்
தோள் கனக்க
துப்பாக்கியோடு போகிறான் - எல்லை நோக்கி,
எனக்காகவும் தான் போகிறான்.

நேற்றும்
கப்பசொனிக்கும் - புக்காராவும்?- அந்த
வறுமைக்குடிலில்
கொஞ்ச தமிழில் மழலை பேசி
குடுகுடுவென வருவாளே!
அந்தப் பிஞ்சும் உடல் சிதறிப் போனதே!

தியாகம் செறிந்த மண்ணில்
தள்ளாடி - கால்பதித்து
கூன் விழுந்த உடலோடும் - பனையே!
கடன் கேட்கும் உறுதியோடும்
கலப்பை தூக்கி போகிறாரே!- ஓ!
தமிழனின் பரம்பரை போகிறதே!

அன்று - அடுப்பங்கரைக்கும்,
அடங்கிப் போவதற்கும்,
மட்டுமே சொந்தமாய் - இன்றோ
உலக பெண்களுக்கே வழிகாட்டிகளாய்
தேச விடியலுக்கான விடிவிளக்குகளாய்
அதோ! ஈழத்தாய் பெற்றெடுத்த
புதல்வியின் புகழுடல் போகிறதே!

நானோ!
மதில் மீது - குந்தி இருக்கிறேன்;
என்னோடோ! இன்னும் சிலர்

கா. சுஜந்தன்

## ஒட்டிப் பிறந்த அதிசயக் குழந்தை

சேலத்தில் ஒரு பெண்ணுக்கு அதிசயமான இரட்டைக் குழந்தை ஒட்டிப் பிறந்துள்ளது.

சேலம் மாவட்டம் ஆத்தூரை அடுத்துள்ள கடம்பூர் கிராமத்தைச் சேர்ந்தவர் பாவாடை. விவசாயம் செய்து வருகிறார். இவரது மனைவி லட்சுமி இவர்களுக்கு ஜெயந்தி என்ற 2 வயது பெண்குழந்தை உள்ளது.

லட்சுமி மீண்டும் கர்ப்பமாகி இருந்தார். கடந்த 2-ம் தேதி இவரது வீட்டிலேயே பிரசவம் பார்க்கப்பட்டு இரட்டை குழந்தை பிறந்தது.

இந்த குழந்தை பார்ப்பதற்கு விநோதமாக இருந்தது. இதில் ஒரு குழந்தை முழுமையாக வளர்ச்சி அடைந்த நிலையில் உள்ளது. இந்த குழந்தையின் இடுப்புடன் ஒட்டி மற்றொரு குழந்தை உள்ளது- ஆனால் இது முழுமையாக வளர்ச்சி அடையாமல் இரண்டு கால்கள் ஆண் உறுப்பு முழு வளர்ச்சி அடையாத உடல் அமைப்பு கொண்ட இந்த குழந்தையின் வயிறும் முழு வளர்ச்சி அடைந்த வயிறும் ஒட்டிக் கொண்டுள்ளன.

இந்த குழந்தையை பற்றி டாக்டர்கள் தெரிவித்ததாவது:-

இதுபோன்று பிறக்கும் குழந்தையை சயாமிஸ் என்று அழைப்பார்கள். 1910ஆம் ஆண்டு சயாம் நாட்டில் இதுபோன்ற இரட்டை குழந்தை பிறந்து அவர்கள் 60 வயதுவரை உயிரோடு இருந்தனர். இவர்களுக்கு தனித்தனியே திருமணம் செய்து வைக்கப்பட்டு குழந்தைகளும் பிறந்தன. உலகில் இதுபோன்று 30 சோடி குழந்தைகள் உள்ளனர்.

இந்தியாவில் தற்போது 2 சோடி குழந்தைகள் உள்ளனர், தற்போது சேலம் ஆஸ்பத்திரியில் உள்ள குழந்தையும் இதே வகையைச் சேர்ந்ததுதான். இரட்டைக் கருவில் ஒரு கரு சரியாக வளர்ச்சி அடையாததால் இதுபோன்ற குழந்தைகள் பிறக்கின்றன. இந்த குழந்தையின் தேவையில்லாத உறுப்புகள் அகற்றப்பட்டு ஒரு குழந்தையாக உருவாக்கப்படும். இந்த குழந்தைக்கு தேவையான அனைத்து பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு அதன் பின்னர் ஆபரேஷன் செய்யப்படும் இவ்வாறு டாக்டர்கள் தெரிவித்தனர்.

# அமைதித்திரையின் பின்னே அழிவின் ஆரம்பம்

# யூதரால் எரிமலையாகும் பாலத்தீனியம்

"அவர்கள் மோசமான தொற்று நோயை ஒத்தவர்கள், இழிவானவர்கள், எனவே கொல்லப்பட வேண்டியவர்கள்" என முன்பு கிட்லர் யூதர் பற்றி கூறியமை வரலாற்றில் ஏற்கனவே பதியப்பட்டுள்ளது ஆனால் இப்போது அதே வார்த்தைகள் யூதர் ஒருவரின் வாயால் அரபு மக்கள் பற்றிக் கூற நேர்ந்துள்ளமையை வரலாற்றின் விபத்து என்றுதான் சொல்ல வேண்டும். இவ்வாறு கூறியவர் வேறு யாருமில்லை. அண்மையில் 4000 வருடப் பழமை வாய்ந்த பாலத்தீனிய மக்களின் தொன்மை நகரமான மேற்குக் கரையிலுள்ள கெப்ரோன் நகரின் ஏபிரகாம் பள்ளிவாசலிலே 30 முசுலிம்களை 8 நிமிடத்துக்குள் சுட்டுக்கொலை செய்து - பின் அவ்விடத்திலேயே சினம் கொண்ட அரபு மக்களால் அடித்துக் கொல்லப்பட்ட பருச் கோல்ட்ஸ்ரெயின்

Baruch Goldstein என்கிற யூதக் குடியேற்றவாசியே இவ்வாறு கூறியிருந்தான். இலட்சக் கணக்கான யூதரை கிட்லர் கொன்று தீர்த்தபோது இந்த உலகம் என்ன செய்தது என்கிற கேள்வியை எழுப்பிய யூதரைப் போலவே இன்று பாலத்தீனியரும் வினா எழுப்புவது பெரும் அவல நிகழ்வாகி விட்டது.

உலகமே தலையைத்தொங்கப் போடவைத்த அச்சம்பவம் சென்ற பெப்ருவரி மாதம் 25-ம் திகதி நடந்தது முசுலிம்கள் நோன்பிருக்கும் ரம்ழான் மாதத்தின் வெள்ளிக்கிழமையன்று 800க்கும் மேற்பட்டோர் தொழுகையில் ஈடுபட்டிருந்தபோது உள்ளே வந்த கோல்ட்ஸ்ரெயின் இசுரேலிய இராணுவத்தால் தனது பாதுகாப்பிற்கென வழங்கப்பட்டிருந்த தானியங்கி துப்பாக்கியின் மூன்று ரவைக் கூடுகளையும், அம்மக்கள்மேல் செலவழித்தான். முதலில் கொலையானோர் 60 பேர் எனக் கூறப்பட்டாலும் இப்போது அத்தொகை 30 எனப்படுகிறது. இச்சம்பவங்களைத் தொடர்ந்து 100 வருடத்திற்கு மேற்பட்ட வெறுப்பும் காழ்ப்பும் ஒன்று திரண்டதைப் போல மேற்குக் கரை காசாப் பகுதிகளில் பெரும் கலகமாக வெடித்த துசினம் கொண்டு சீறியெழுந்த மக்களை அடக்க முற்பட்ட இசுரேலிய இராணுவம்மேலும் பல பத்துப் பேர்களை கொன்றது இன்றும் இப்பகுதிகளில் கொந்தளிப்புகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளது. இசுரேலிய - பாலத்தீனிய உடன்பாட்டை நடைமுறைப்படுத்தாமல் தடுப்பதற்காகவே தான் இக் கொலைகளை செய்யப்போவதாக கோல்ட்ஸ்ரெயின் முதலிலேயே கூறியிருந்ததாக இப்போது தெரிவிக்கப்படுகின்றது.

எது எப்படியிருந்த போதும் எத்தனை படுகொலை சம்பவங்களைத்தான் பாலத்தீனிய மக்கள் பொறுப்பது? 1948-ம் ஆண்டு டெயர் யாசின் (Deiryassin) பகுதியில் 201 அரபுக்கள் படுகொலையில் தொட்டு 1982-ம் ஆண்டில் லெபனானில் பெய்ரூட்டிற்கு அண்மையில்சப்ரா, சட்டில்லா ஏதிலிகள் தங்ககங்களில் 2000 பாலத்தீனியர் படுகொலையாக்கப்பட்ட சம்பவங்கள் உள்ளிட்டு இப்போது கெப்ரோன் படுகொலை வரை தொடரும் இக்கொலைகள் பாலத்தீனிய மக்களின் அவலத்தைப் பறைசாற்றுகின்றன இப்போது உலக வரலாற்றிலேயே பற்பல தாக்கங்களை ஏற்படுத்திய சில படுகொலைச் சம்பவங்கள் போல கெப்ரோன் சம்பவமும் அமையப் போகின்றது. ஒரு மட்டுப்படுத்தப்பட்ட தன்னாட்சி அதுவும் ஒரு குறிக்கப்பட்ட சிறியபகுதிக்கு வழங்குவதையே பொறுக்காது இசுரேலிய இராணுவமும் அவர்களால் பயிற்றுவிக்கப்பட்டு ஆயுதம் வழங்கப்பட்ட யூத தீவிர குடியேற்ற வாசிகளும் செயற்படும் விதம் எதிர்கால ஆபத்துகட்கு கட்டியம் கூறி நிற்பதாகவே இப்போது கருதப்படுகின்றது. கெப்ரோன் படுகொலையைத் தடுக்க இசுரேலிய இராணுவம் எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்ளாதது இப்போது மிகத் தெளிவாகவே உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது.

எனவே அரபாத்தின் நிலை தணலில்பட்ட புழுப் போலாகி விட்டது. "எனக்கு எத்தனை பக்கம் எதிர்ப்புகள்?" என அவர் இப்போது ஓலமிடுகின்றார் "றபினுக்கோ எதிர்க்கட்சியால் மட்டுமே எதிர்ப்பு எனக்கோ பாலத்தீனியர் எதிர்ப்பு. இசுலாமியர் எதிர்ப்பு கிறித்தவர் எதிர்ப்பு எத்தனை எதிர்ப்பை நான் பொறுப்பது? அமைதிக்கான விலையை நானே தொடக்கத்திலிருந்து கொடுத்து வருகிறேன்" என அலறுகிறார். ஏனென்றால் தொடக்கம்முதலே அரபாத்தின் எதிர்ப்பாளர்கள் இசுரேலியர் அமைத்த இருநூறுக்கும் மேற்பட்ட யூதக் குடியேற்றங்களின் எதிர்காலம் பற்றியும். ஏதிலிகளாக அலையும் இலட்சக் கணக்கான பாலத்தீனியர் தாயகம் திரும்புவது பற்றியும்

> எனக்கு எவர் உதவுகிறார்கள்? அமெரிக்கா உதவ முன்வரவில்லை. றபினுக்கோ அவரது எதிர்க்கட்சி மட்டுமே எதிர்ப்பு. ஆனால் எனக்கோ? பாலத்தீனியர் எதிர்ப்பு, அரபுக்கள் எதிர்ப்பு, இசுலாமியர் எதிர்ப்பு, கிறித்தவர் எதிர்ப்பு. நீங்கள் நியாயமாக பாருங்கள் தொடக்கத்திலிருந்தே அமைதிக்கான விலையை நான் மட்டுமே கொடுத்து வருகிறேன். இப்போதும் நான் தெருவில் இறங்கி அரபு மக்களிடம் இசுலாமிய மக்களிடம் நான் முற்றாக ஏமாற்றப்பட்டுவிட்டேன் என்று கூறினால் என்ன நடக்கும்? அப்போது தான் நான் யார் என்பது விளங்கும். கடந்த ஆறு மாத காலமாக எதுவுமே உடன்பாட்டின்படி நடக்கவில்லை.
>
> (அரபாத் அண்மையில் கொடுத்த செவ்வியொன்றில்)

உடன்பாடு மௌனம் சாதிப்பதைச் சுட்டிக் காட்டி இந்த உடன்பாடு பயனற்றது எனக் கூறியது இப்போது சரியென அரபாத்தே ஏற்க வேண்டிய நிலை தோன்றுகிறது. என்றாலும், அரபாத் முருங்கை மரத்து வேதாளம் போல் முயற்சியைக் கைவிடாது பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்தி, மீண்டும் சூறாவளிப் பயணம் மேற்கொண்டு கெப்ரோன் பகுதியில் ஆயுதம் தாங்கிய சருவதேச பார்வையாளர்களை நிறுத்து மாறும் யூதக் குடியேற்றவாசிகளின் ஆயுதங்களைப் பறிக்கு மாறும் கோரிவருகின்றார். அவரது கையறு நிலையை உணர்ந்த மேற்குலகம் அவரைக் கைதூக்கி விடவே முயலுகின்றது

இந்நிலையில் தான் ஆடமுற்பட்ட அமைதி நாடகமே அம்பலப்படும் நிலையில் இருப்பதால், பிரதமர் றபின் இப்போது சற்றுப் பின்வாங்குகின்றார். மிகுந்த அழுத்தங்களின் பின் அரபாத்தின் கோரிக்கைகளைமுற்றிலுமாக ஏற்காதபோதும் ஒரு சில வெளிநாட்டுப்பார்வையாளரை கெப்ரோன் பகுதிக்குள் நிறுத்த அவர் இப்போது சம்மதிக்கிறார். யூதக்குடியேற்றவாசிகளின் ஆயுதங்களைப் பறிக்க முடியாது என்று அவர் கூறிவிட்டார். எனினும் படுகொலையில் சம்பந்தப்பட்ட இரு தீவிரவாத யூத அமைப்புக்களை தடைசெய்து அவற்றின் முக்கிய சில தலைவர்களையும் இப்போது சிறையிலிட்டுவிட்டார். இவற்றைச் செய்து அரபாத்தை திருப்தி செய்ததுபோல பாவனை பண்ண அரபாத்தும் வேறு வழியின்றி சம்மதிக்க இப்போது மீண்டும் இசுரேலிய பாலத்தீனிய உடன்பாடு பற்றிய பேச்சுக்கள் தொடர்கின்றன. மூல உடன்பாட்டின்படி இம்மாதம் 13-ம் திகதிக்குள் காசா, மற்றும் ஜெரிக்கோ பகுதியிலிருந்து இசுரேலிய இராணுவம் வெளியேற (இசுரேலிய குடியேற்றங்களை பாதுகாக்கும் இசுரேல் இராணுவம் தவிர்ந்த) முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு விட்டதாக பாலத்தீனிய காவல்துறை அதிகாரிகள் இப்பகுதிகட்கு வரத் தொடங்குவதாக உறுதியான செய்திகள் தெரிவிக்கின்றன. எனவே அப்பாடா! ஒருமாதிரி மீண்டும் அமைதி தோன்றுமென கிளிண்டன் பெருமூச்சு விடுகிறார். ஆனால் உண்மை நிலை என்ன?

இவை எப்படியிருந்த போதும், ஜெரிக்கோ மற்றும் காசாப்பகுதியில் குடியேற்ற வாசிகளைபாதுகாப்பதற்காக தளங்கள் அமைக்கும் இராணுவம், ஏனைய ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இயங்கும் தீவிரவாத அமைப்புக்களை கட்டுப்படுத்துவது என்பது இலேசான காரியமல்ல. எனவே ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள் இதுவரை றபினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மேலோட்டமானவையாக - ஒப்புக்கு செய்யப்படுவையாக இவர்கள் கருதுகின்றனர் ஏனென்றால் சியோனிசவாத கோட்பாடுகளை வகுத்துக்கொண்ட இந்த அமைப்புகளை வளர்த்து இவர்களை யூதக் குடியேற்ற பகுதிகளில் ஊடுருவச் செய்தது. இதுவரை இசுரேலிய அரசேயாகும். இவர்கட்கு முழுமையான இராணுவப் பயிற்சியும் வழங்கி ஆயுதங்களும் கொடுத்து அவற்றினை எந்த நேரமும் காவித்திரிய அனுமதிமட்டுமல்ல, தற்பாது காப்பிற்காகஎந்தப்பாலத்தீனியரையும் சுட்டுக் கொல்லும் அதிகாரம் வழங்கியதும் இசுரேலிய அரசேயாகும். எனவே இவர்களைக் கட்டுப்படுத்த முயலுமபோது இப்போது வளர்த்த கடா மார்பில் பாயும் நிலை தோன்றலாம் என வேறு கருதப்படுகிறது. இப்போதும் கெப்ரோன் பகுதியைச் சுற்றி ஆயுதங்களுடன் பல்லாயிரக்கணக்கான யூதர் திரிகின்றனர். இவர்கள் அங்கத்துவம் வகிக்கும் இருபிரதான அமைப்புக்கள் மிகத் தீவிரமானவை, வேரூன்றி வளர்த்தவை.

ககேன் (Kahane) கச் (Kach) எனப்படும் இவ் இரு அமைப்புக்களின் சிந்தாந்தம் அரபுக்களை கொல்வதன் மூலம் யூதர் புனிதமடைகின்றனர். கடவுளின் மகிமையை மேலோங்கச் செய்கின்றனர் இறைதூதன் வரும் காலத்தை விரைவு படுத்துகின்றனர் என்பதேயாகின்றது.

## பாலகுமாரன்

குறிப்பாக 1990ம் ஆண்டு நியூயார்க்கில் வைத்து இசுலாமியவாதிகளால் கொல்லப்பட்ட றபி மெயிர் ககேன் (Rabbi Meir Kahane) என்கிற தீவிரவாத யூத மத தலைவரின் பெயரால் இயங்கும் (Kahane Lives) என்கிற ககேன் அமைப்பின் தீவிர விசுவாசியே கோல்ட்ஸ்ராபின் ஆவார். இவர் இப்போது இவர்களால் வீரத்தியாகமாக மதிக்கப்படுகிறார். இங்குள்ள வியப்பு என்ன என்றால் இவ் இரு அமைப்புகளின் செயற்பாடுகளுக்கு இதுவரை காலமும் அமெரிக்காவே தலைமையகமாக இருந்தது தான். இசுலாமிய அடிப்படைவாதம், இசுலாமிய பயங்கரவாதம் பற்றி பலதும் பேசும் மேற்குலகம் இத்தகைய யூதமதவாத அடிப்படைப் போக்கினை மறந்தது ஏன் என்கின்ற கேள்வி இப்போது எழுகின்றது? ஏனென்றால் இசுரவேலின் சட்டமா அதிபர் அண்மையில் இவ்விரு அமைப்புகள் பற்றி குறிப்பிடும்போது "இவ்விரு யூத அமைப்புகளும் முசுலிம்களின் கமாஸ் அமைப்புக்கு எவ் வகையிலும் குறைந்தவையல்ல" இசுரவேலின் தீவிரவாத மத அரசொன்றை உருவாக்கி இங்கே எஞ்சியிருக்கும் 20 இலட்சம் பாலத்தீனியரையும் அரத்தியடிக்கும் நோக்கம் கொண்டவை" என்றார். எனவே இப்போது எது அடிப்படை வாதம்? எது தீவிரவாதம் என்கிற வினா சருவதேச அரங்கில் எழ இக்கெப்ரோன் படுகொலை வழிவகுத்து விட்டது.

எனவே இப்போது எப்படிப் பார்த்தாலும் பாலத்தீனிய மண்ணில் குடியேற்றப்பட்ட யூதர்பற்றியசிக்கலேமுதன்மை பெறப்போகின்றது. பெரும் கொந்தளிப்புகள் எல்லாத் தரப்பிலுமே இப்போது எதிர்பார்க்கப்படுகிறது. இசுரேலிய இராணுவமோ அல்லது வேறு எவருமோ இவர்களைக் கட்டுப்படுத்துபவர் என்கிற நம்பிக்கை பாலத்தீனிய மக்கட்கு இல்லை. இதன் விளைவு என்னவென்றால் இப்போது தோன்றியுள்ள புதிய சூழலில் நேரடியான மோதல்கள் இரு பகுதிக்கும் ஏற்படலாம் என்கிற அச்சம் கிளர்ந்தெழுகின்றது. இப்போது காசாப் பகுதியில் ஆயுதங்கள் பன்மடங்காக வந்து குவிவதாகவும், அவற்றின் விலையும் வேகமாக ஏறுவதாகவும் இவற்றை வாங்குவதற்காக பாலத்தீனியர் ஒவ்வொருவரும் தம்மிடம் உள்ளவற்றை விற்றோ அடகு வைத்தோ ஆயுதங்களைப் பெற முயல்வதாக தகவலொன்று தெரிவிக்கின்றது.

தொடக்கத்தில் எஞ்சியிருக்கும் யூதரும் இசுரேலை தாயகமாகக் கொள்ள வேண்டும் என்கிற உறுதிப்பாட்டில்தமது "தாயகம் நோக்கிய பயணத்தை" யூதர்கள் ஆரம்பித்த போதும் இப்போது இத்தொகை மிக அருகிவிட்டது. தனது எல்லைப் பகுதிகளில் ஏனைய அரபு நாடுகளிலிருந்து கைப்பற்றிய பகுதிகளை பாதுகாப்பு வலயமாக்க இராணுவ கோட்டைகளாக்க இம் மக்களே குடியேற்றப்பட்டனர். இசுரேலின் ஏனைய பகுதிகளோடு இங்கு அரசு அளித்த பெரும் நிதியுதவிகள் மேலும் பலரைக் குடியேற்றவாசிகளாக்கியது. எனவே இப்போதைய கணிப்பின்படி சிரியாவின் கோலான் குன்றுப் பகுதியில் 35 யூதக் குடியேற்றங்களில் 13,000 யூதரும் காசாவின் 16 குடியேற்றங்களில் 5000 பேரும் மேற்குக்கரையின் பரந்த '50க்கு மேற்பட்ட குடியேற்றங்களில் 120,000 பேரும் உள்ளனர். இவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியானதால் இப்பகுதிகள் அமைதியற்றுக் கலவரப்படுகின்றன. அத்தோடு கமாஸ் அமைப்போ சென்ற மார்ச் மாதம் 15ஆம் திகதிக்குபின்னர் யூதக் குடியேற்ற வாசிகள் இருக்கப்படாது என்ற எச்சரிக்கை வேறு விடுத்து விட்டது. கெப்ரோன் படுகொலைக்கு பழிக்குப்பழி என்

(10ஆம் பக்கம் பார்க்க)



[கெப்ரோனில் இப்போதும் ஆயுதங்களுடன் யூதர்]

# மதுராவின் இரவு மதுரமானது

## மதுராவின் தானம்! இனிக்கும் இரவு!

## மதுர கானம்!! ஏப்பிரல் இருபது!!

மதுரகான மழையினுள் அதிர்ஷ்டசாலி யாரெனக் கண்டிட
இனிக்கும் இரவு ஏப்பிரல் இருபது இசைந்தே வாருங்கள்!

# இளங்கலைஞர் மன்றம்

**ஆம்**

**மதுரா ஆதரவாளர்களின் பரிசுத்திட்ட குலுக்கல் நிகழ்வினை சிறப்பிக்கும் வகையில் நிகழவிருக்கும் கலை நிகழ்ச்சிகள்**

- தலைசிறந்த நாதஸ்வர தவில் மேதைகளின் நாதஸ்வர தவில் கச்சேரி
- நவரச நகைச்சுவை கதம்ப நிகழ்ச்சி
- கலை பண்பாட்டுக் கழகத்தினரின் "சந்தனக் காடு" நாடகம்
- தமிழீழத்தின் பிரபல்யமான இசைக் குழுவினரான **இராஜன் இசைக்குழுவினரின்** இன்னிசைக் கச்சேரி

"மதுரா பட்டு மகால் ஆதரவாளரின்
அதிர்ஷ்டம் பார்த்தல்"

**அனுமதி இலவசம்**

குறிப்பு: மதுரா பட்டு மகாலில் புடைவை வாங்கும் சிட்டைகள் யாவும் பரிசுத்திட்ட குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படவிருப்பதால், புதுவருடத்திற்கான ஆடைத் தெரிவுகளின்போது மதுரா பட்டு மகாலில் ஆடைகளை தெரிவுசெய்து மேலும் சிட்டைகளை சேகரித்து அதிர்ஷ்டசாலியாகும் சந்தர்ப்பத்தை அதிகப்படுத்திக் கொள்ளுங்கள்.

**1ஆம் பரிசு: தங்கப்பதக்கம்**

**2ஆம் பரிசு: 5000/-**

**3ஆம் பரிசு: 2500/-**

**பல ஆறுதல் பரிசுகள்**

ஓர் ஆண்டு நிறைவை நோக்கும்

# இப்புத்தாண்டு தினத்தில் மதுரா பட்டு மகாலின்

**வளர்ச்சி மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்!**

(சி | 9055)

**லிங்கம் சில்க் கவுஸ்**
21, மேல்மாடி, நவீனசந்தை,
18, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**மகாராணி புடைவை மாளிகை**
50, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**சீமாட்டி புடைவை அகம்**
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சிறுகதை

# சிறைக் கூடங்கள்

-திருமலை ஆரணி

கோணேஸ்வரம் அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தது. எல்லா இனமக்களும் செறிந்து வாழும் டவுண் பகுதியில் புதிது புதிதாகக் குட்டிபோட்ட சிங்களக் குடியேற்றங்கள்...! கருத்தரித்தபடியும் சில...!! இவற்றைப் பார்க்கும்போது நெஞ்சை என்னவோ வந்து அடைப்பது போன்ற உணர்வுதான் ஏற்படும். என்ன செய்வது...? அரசு ஆதிக்கத்துடன் என்றோ வெள்ளரசுகளும் வேரூன்றப்பட்டு விட்டனவே...! இந்தப் பிரதேசத்திலும் ஒருவிதமயான அமைதி குடிகொண்டிருந்தது. தூரத்தே சில தெரு நாய்கள் ஒன்றோடொன்று கடிபடும் ஓசை... அதனால் ஈஸ்வரத்தில் அவை எழுப்பும் முனகல்கள்... இவையெல்லாம் பனிக்குக் கிட்டவாகக் கேட்டுக்கொண்டிருந்தன. திடீரென்று அமைதியைக் கிழித்துக் கொண்டு வரும் டிரக் வண்டிகளின் உறுமல்கள்... சடாரென்று அவை பிரேக் அடித்து நிற்பதும் போவதுமாகப் பல பயமுறுத்தல்கள்... இலக்கத்தகடுகளில்லாத வான்களில் நரவேட்டைக்குப் புறப்பட்டுச் செல்லும் கறுப்புச்சட்டைககாரர்களை நினைவூட்டுவதுபோல...!

தெரு நாய்களின் முனகல்களும் அடங்கிவிட்டன. இதமான இளங்காற்றின் மென்மையான வருடலுடன், சங்கிலித் தொடர்போலச் சேவல்களின் கூவலுடன் அமைதியான உதயமொன்று அதிகாலையில் பிறந்தது. அதனைத் தொடர்ந்து காளி கோவிலின்கணீர் என்ற மணி ஓசை... பள்ளிவாசல் ஒன்றில் ஒலிபெருக்கிமூலம்குரலெடுத்து குரான் ஓதும் மௌலவி றகமதுல்லாவின் கம்பீர ஒலி... இன்னொரு புறத்தால் பன்சாலையிலிருந்து புறப்படும் ''புத்தங் சரணங் கச்சாமி... சங்கங் சரணங் கச்சாமி'' இந்த ஒலிகளெல்லாம் அந்த மண்ணின் மடியில் முரண்பட்டுக் கிடக்கும் மனங்களைப்போல ஒன்றை ஒன்று வெட்டிக் கொண்டிருந்தன. இந்த இனிமைகளையெல்லாம்உதயத்தில் சுவைத்தபடி பலரும் தத்தமது போர்வைகளுக்குள் கதகதப்பைக் கண்டுகொண்டிருந்தார்கள்.

காளி கோவிலின் மணிஓசை கேட்டதுதான் தாமதம், பரபரப்புடன் சுப்பிரமணியம் மாஸ்ரர் படுக்கையை விட்டெழுந்தார். இருட்டில் ஒருவாறு சுவரைத் தடவிச் சுவிச்சைப் பிடித்து அதனைத் தட்டிவிட்டார் மின்னொளியில் அறை குளித்தது இரவு கவனமாக மேசைலாச்சிக்குள் வைத்திருந்த மூக்குக் கண்ணாடியையும் அணிந்துகொண்டு கையில் ரோச் லைற்றையும் பிடித்துக்கொண்டு கிணற்றடிப் பக்கமாக நடந்தார். அவர் அணிந்திருந்த தொளதொளத்த பனியன் மழைக் குளிரைத் தாங்கத் தைரியமின்றி மார்பிலே வந்து அடித்ததைவிட தெய்வானை மாஸ்டர் இரவு சொன்ன செய்தி ஒன்று தான் அவரது மனதை ரம்பமாக அறுத்துக் கொண்டிருந்தது.

''அது உண்மையாக இருக்குமோ? அப்பிடி ஒன்று நடந்து அதன் விளைவாக இங்கை ஏதாவது அசம்பாவிதம் நடக்குமா இருந்தா இங்கை இருக்கிற எங்கடை ஆக்களின்ரை நிலை என்னவாகப் போகும்...?''

அவரது மனம் மெல்ல முணுமுணுக்க பழைய இனக்கலவரக் காட்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக மாஸ்டரின் மனத்திரையில் ஓடி அவரைப் பயமுறுத்திக் கொண்டிருந்தன.

''காளி... தாயே... நீயே துணை அம்மா''

கோயிலின் திசையை நோக்கி ஒரு கணமும் மறுகணம் வானத்தை நோக்கியும் அவரது கரங்கள் கூப்பின. காலைக்கடன்களை அவசரம் அவசரமாக முடித்துக் கொண்டு, குடுவைக்குள் கிடந்த விபூதியை எடுத்து நெற்றியில் அப்பிக் கொண்டு, கையில் அகப்பட்ட சேர்ட் ஒன்றையும் எடுத்துக் கொழுவிக்கொண்டு படியை விட்டு இறங்கும்போது இன்றைய பொழுதைப் பற்றி எதுவித கவலையுமின்றி புன்னகை அரும்பும் உதடுகளுடன் புரண்டுபுரண்டு படுத்துறங்கும் வீட்டு ஜீவன்களினை ஒரு தடவை பெருமூச்சுடன் பார்த்துவிட்டுத் தெருவில் இறங்கி நடக்கத் தொடங்கிவிட்டார்.

'நானாவின் கடைப்பக்கம் போனா நிச்சயம் ஏதாச்சும் புதினம் தெரிய வரும்...'

மனம்கணிக்க அவரது பாதங்கள் சர்பத்துக்குப் பேர் போன நானா கடைப் பக்கமாக அவரை இழுத்தன. கடை வாங்கில் வந்து மணியம் மாஸ்டர் இருந்தார். பக்கத்தில் இருந்தவர்களின் முகங்கள் நம்பிக்கை தருவதாக இல்லை. சிலர் குசுகுசுத்துக் கொண்டிருந்தார்கள். ஓரளவு மௌனம் ஆட்கொண்டிருந்த நிலை மாஸ்டருக்கு அந்தரத்தைக் கொடுத்தது. ஒருவர். வாயில் புகைத்த பீடிக்கட்டையை வீசி எறிந்து விட்டு பெருமூச்சுவிட்டார். கடைப்பெடியன் இக்பால் சைக்கிள் கரியரில்சாக்கினால் மூடிக்கட்டியிருந்த ஐஸ் கட்டியை எவ்வித சலனமுமின்றி இறக்கிக் கொண்டிருந்தான். அவனுக்கென்ன தெரியும்? பாவம்... சின்னப்பயல்-

நிலம் தெளிவாகி எவ்வளவோ நேரம். மாஸ்டரின் மனதில் மட்டும் தெளிவில்லை. பயம் கலந்த குழப்ப நிலை ஒன்று அவரைப் படாதபாடு படுத்திக் கொண்டிருந்தது. அவருடைய சந்தேகத்தை நிவர்த்திப்பதற்குச் சரியான ஆள் இன்னும் அவருக்குக் கிடைக்கவில்லை. கண்டவர்கள் நிண்டவர்களுடன் நாட்டுப் பிரச்சினைகளைப் பற்றிக் கதைப்பது எவ்வளவு ஆபத்தென்பது மாஸ்டருக்குத்தெரியாதாஎன்ன?

மாஸ்டரின் முகத்தில் இப்போது மகிழ்ச்சியின் ரேகை ஒன்று குறுகுறுத்தது. தூரத்தேதெரிந்தசோதியின் வருகை சோம்பிக் கிடந்த அவரது மனதுக்குச் சற்று உற்சாகத்தைக் கொடுத்திருக்க வேண்டும்.

''அடே... சோதி... வாடா வா...உன்னைப்போலஒருத்தனைத்தானே விடிஞ்சதில இருந்து தேடிக் கொண்டிருக்கிறேன்''

அவரது உதடுகள் உச்சரிக்க முன் அவரது உள்ளம் சோகத்திலும் ஒரு சந்தோசத்துடன் அவனது உறவில் சங்கமிக்க விழைந்தது.

சோதி ஒரு குசிப் பேர்வழி அவன் லேசாக எதையும் எடுத்துக்கொள்ளக்கூடியவன் பல இடங்களிலும் அவன் அடியுண்டவன் பக்குவமான ஒரு பகிடிக்காரன். கடையில் கூட்டம் அதிகரிக்கவே மாஸ்ரர் கடையை விட்டிறங்கி வெளியே நின்றார்

''மாஸ்டர்...என்ன பெரிசா யோசிக்கிறீங்க போல இருக்கு'' சோதி பொடிவைத்துப் பேசிக்கொண்டே வந்தான்.

''சோதி.. வாடாப்பா... ராத்திரி தெய்வானை மாஸ்டர் சொன்ன விசயம்உண்மையாடாப்பா...?

''ஆ...சிங்கள மாக்கெற்றிலை குண்டு வெடிச்ச விசயந் தானே....? எத்தினை பேர் செத்தாங்கள் எண்டதுதான் தெரியல்ல...மாஸ்டர் கடையில என்ன பேசிக்கிறாங்கள்...?''

''பழக்கமில்லா தவங்களோடை இதைப்பற்றி யெல்லாம் கதைக்கிறதா...?

''மாக்கெற்றிலைஇரவு தானே குண்டுவெடிச்சுது அதனால இன்றைக்குப் பகல் பொழுது இங்கால வெளிக்கிட்டுத் திரியிறது அவ்வளவு நல்லதாத் தெரியல்ல... இனக்கலவரம் வந்திட்டுதெண்டாத் தான் எங்கட பாடு ஆபத்து...''

''ஓமடாப்பா சோதி...எங்கேகுண்டு வெடிச்சாலும் இங்கைஎங்கட பாடு தானே ஆபத்து. எங்கேநாங்கஓடிறது? ஓடிறதெண்டா நேவிக்கையும் கோட்டையுக்கையுந்தானே நாங்கஓடவேணும்...மூண்டு பக்கமும் கடல் மடத்தடியைத் தாண்டிறதெண்டால் சிங்களவங்கடை கத்திவெட்டுக்களையும், குத்துக்களையும் தாங்கவேணும். நோமலான நேரத்திலைகூட நாங்க பயந்து பயந்துதான் றெயில்வேஸ்ரேசனுக்குப் போய் வாறம்... வெளியிலை உள்ளவங்கள் நினைக்கிறாங்கள் இங்க பிரச்சினை இல்லை... கொன்றோல் பிறைசிலை சாமானுகளை வேண்டிக் கொண்டு சந்தோசமா நாங்க வாழிறமெண்டு. பாம்பின் வாயுக்கை எம்பிட்ட தவளை மரணத்தை ஏற்று விட்ட நிலையிலை அந்த வேதனைகளையெல்லாம்பட்டுக்கொண்டிருக்கிறதோ.. அதே வேதனைகளைத்தான் நாங்களும் இங்க அனுபவிச்சுக் கொண்டிருக்கிறம் என்டது பலருக்குத் தெரியாது ... ஏன் இங்கஇருக்கிறவை கூடச் சிலர் தெளிவில்லாமைத்தான் வாழுகினம்''

''சரியாச் சொன்னீங்க மாஸ்டர்... கொன்றோல் பிறைசிலை சாமானுகளை வேண்டி வாழ்ந்திட்டா... அதுதான்சுதந்திரமான வாழ்க்கை என்று நம்பிக் கொண்டிருக்கிற சனங்களும் நிறைய இருக்கு... வயித்தைப்பாக்கிற இந்தச் சனங்கள் அறிவு பெறாத வரை எங்களுக்கு உண்மையான சுதந்திரம் கைக்கெட்டாத உயரத்தில்தான் இருக்கப்போகுது...'

சோதி சொன்னவற்றை ரசித்தபடியே தலையை ஆட்டிக் கொண்டிருந்தார் சுப்பிரமணியம் மாஸ்டர்.

''ஆ...எங்கட பக்கமும் ஒரு ஆள் சேருது மாஸ்டர்' காலையில் பலகாரம் வாங்கவென்று கடைப்பக்கம் வந்த தெய்வானைமாஸ்டரைக் கண்டுவிட்டு சிரித்தான் சோதி.

''மணியம் மாஸ்டர் இண்டைக்கு வேளைக்கே வந்தாச்சுது போல...ஏண்டாப்பா சோதி இண்டைக்கு மணிக் கூட்டடி மாக்கெற்பக்கம் போகலாமடாப்பா...?'' கேட்டுக்கொண்டே பேயறைந்த முகத்துடன் வந்து சேர்ந்தார் தெய்வானை மாஸ்டர்.

''ஆ.. வாங்க மாஸ்டர் அது சம்பந்தமாகத்தான் மணியம் மாஸ்டரும் நானும் கதைச்சுக் கொண்டு நிக்கிறம் இண்டைக்குக் காலம்புற நியூசிலை ஏதாச்சும்...?

''சிலோன் நியூசிலை மாக்கெற் குண்டு வெடிப்புப் பற்றிச் சொன்னாங்கள்... பிரேமசிறி... பொடிநோனா எண்ட ரண்டு பேர் செத்திட்டாங்கலாம் ஆஸ்பத்திரியிலை ஆபத்தான நிலையிலை கொஞ்சப்பேரைப்போட்டிருக்கிறாங்களாம்''

',ம்... அவங்கடை செய்தியளை ஆர் நம்பிறது? ஒரு காலந்நிலை ஞந்நிபச்செ சய்தியளை நம்பினோம்... இந்தச் சிறைக் கூடத்துக்கை ஓரளவு உண்மையைத் தாறதுக்கு பி.பி சியையும் வெரித்தாசையும் விட்டா வேறு எது இருக்குது ..?'' மணியம் 'மாஸ்டர் சொல்லி வாய் மூடுமுன்...

''மணியம் மாஸ்டர் கனநேரமா ஏதோ டிஸ்கஸ் பண்ணிற மாதிரித் தெரிஞ்சிச்சி... நீங்க என்ன பேசிறீங்கோண்டது எனக்கும் வெளங்கிச்சி... நம்பள மாதிரி சோலி சொறட்டு இல்லாமே தொழில்செஞ்சிறவங்களை அல்லாதான் காப்பாத்தணும்... யா... அல்லா!'' சொல்லிவிட்டு கடைக்காற நானா தம்பாட்டுக்கு ஓதினார்.

''நானாவை விட்டிடுஇப்ப எங்கட பிரச்சினைக்கு வருவம்... நேற்றைக்கு நடந்த குண்டுவெடிப்புகளெல்லாம் இண்டைக்கோ நாளைக்கோ செக்கிங் பண்றதுக்குப் பெரிய முத்தவெளிக்குவா .. சின்ன முத்தவெளிக்குவா எண்டு அறிவிக்கத்தான் போகிறாங்கள்.. ஆமி.. நேவி... முகமூடி எண்டு கடுமையான செக்கிங்குகளாத்தான் இருக்கப்போகுது ... இப்படியெல்லாம் போட்டு இவன்கள் ஆரைப் பிடிக்கப் போறான்கள்?'' தெய்வானை மாஸ்ரர் அலுத்துக் கொண்டார்.

''தொண்ணூறிலை பிரச்சினைதொடங்கின கையோட எங்கட சனமெல்லாம் பாதுகாப்புக்காக நிலாவெளிப் பக்கமா ஓடிச்சினம் பிறகு திரும்பிவந்த ஆக்களை இனவழிப்புத் துடைப்புக்காகக் கெண்டே 'கிளப்பன் பேர்க் காம்பிலை வைச்சிருந்தாங்க... ஏதோ பேருக்கு அரிசி.. பருப்பு எண்டு தந்தாங்கள் இரவு 6மணிக்குப்பிறகு தண்ணி தர மாட்டாங்கள...குடிக்கிறது... குளிக்கிறது எல்லாம் ஒரே தண்ணிதான். இந்தக் காம்பிலதான் சனங்கள் நிறையக் காணாமப் போயிட்டுதுகள் எங்கடை குடும்பத்திலை ஒண்டுமே நடக்கையில்லை எல்லாம் இந்த அம்மாளின்ரை செயல்தான்...!'' தொடர்ந்து பேசிய மணியம் மாஸ்ரரின் தொண்டை கரகரத்தது தொண்ணூறின் அச்சங்களையும் அவலங்களையும் அவரது மனம் மீண்டும் அசைபோட்டதன் விளைவாக அவருடைய குரல் தழதழத்தது கண்கள் கசிந்தன.

''காம்பிலை இருந்த பெடியளையும் பெட்டையளையும் போக்குவரத்துச்சபை பஸ்சிலை கொண்டுபோனாங்கள் அந்தப்பிள்ளைகளுக்கு என்ன நடந்ததோஎங்களுக்குத் தெரியாது... காணாமற் போனவைக்குப் பெரிய எடுப்பாடெத் சேர்ட்டிபிக்கெற் குடுக்கிறதும் அழிச்சுப்போட்டும் கருக்கிப்போட்டும் எடுப்பா கொம்பென்சேசன் எண்ட சொல்லைக் காட்டி உலகத்தின்ரை கண்ணுக்கை மண்ணைத் தூவிடலாம் எண்டு அரசாங்கம் மனப்பால் குடிக்குது இவன்கள் செய்த அநியாயங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் எண்டைக்கோ ஒரு நாளைக்கு நிரந்தரமான பதிலடி கிடைக்கத்தான் போகுது மணியம் மாஸ்டர் வயதுக்கு மீறிய உணர்ச்சியுடன் துடித்தார். அவரது உடல் நடுநடுங்கியது. உள்ளம் தர்மாவேசத்துடன் உலை கொதிப்பது போன்றுகொதித்துத் தள்ளியது.

தூரத்தே பொலீஸ் ஜீப் ஒன்று வேகமாக வந்து இவர்கள்மூவரையும் கடந்துசென்று கொண்டிருந்தது. இன் சய்தினொரு திசையிலிருந்து றொபி பக்கெற்றுகளுடன் றொபி ... றொபி...... என்று கூறிக் கொண்டு இவர்களுக்குக் கிட்ட நெருங்கி வந்தவனைக் காண சோதிக்கு உடல் உதறல்எடுத்தது அவன் இவர்களுக்குகிட்ட நெருங்கிசோதியைக் குரூரமாக ஒரு பார்வை பார்த்துவிட்டுத் தன் காவிப்பற்களைக் காட்டிச் சிரித்தான்.

''என்னா கூட்டங் கூடிறது ......ஆங்.... அது எனக்குங் சங்கதி தெரியுங்..... மிச்சங்... மிச்சங் தெரியுது மச்சாங்...

ஓ... நம்மள ஏமாத்தேலா ''

அவன் இவர்களைக் கடந்து, ''றொபி...'' ''றொபி'' என்று கூவிக் கொண்டு ஜீப் போன திசையில் போய்க் கொண்டிருந்தான்.

''மாஸ்டர்... இங்கநடக்கிற அட்டூழியங்களுக்கெல்லாம் இவன் தான் அடிக்கால்... பொலிஸ் உளவாளி... எங்களைப் பொறுத்தவரை இந்த மலையில் ஆபத்தானவன். பேருக்கு றொபி யாவாரத்தைச் செய்து கொண்டு காட்டிக் கொடுப்பது தான் இவன்ரை வேலை'' சோதி பயந்த குரலில் சொல்லி முடித்தான்

நானா கடைக்குள் பிசியாக இருந்தார். இன்னும் சிறிது நேரத்தில் நடக்கப் போகும் சர்பத் வியாபாரத்துக்காக இக்பால் அன்னாசி பழங்களைத் துரிதமாகத் துண்டு துண்டாக வெட்டிக் கொண்டிருந்தான், குண்டு வெடிப்பு நடந்ததைப்பற்றிய கவலையோ, பயமோ அவர்களிடம் இல்லாமல் வெகு இயல்பாக அவர்கள் வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

இவர்களைக் கடந்து சென்ற ஜீப் மீண்டும் படு வேகத்தில் வந்தது. நானா கடைக்கு முன் பிரேக் அடித்து நின்றது. ஜீப்பை விட்டு வேகமாகக் குதித்த பொலிஸ்காரர்கள் அதே வேகத்தோடு எதுவித விசாரணையுமின்றி சோதியை ஜீப்புக்குள் தள்ளினார்கள். எல்லாம் மின்னல் வேகத்தில் ! சோதியின் முகத்தில் ஒரு பொலிஸ்காரன் ஓங்கி அடிப்பதும் சோதி மன்றாடுவதும் ஜீப்பின் கண்ணாடிக்கூடாக மணியம் மாஸ்டருக்குத் தெரிந்தது காக்கிகளின் பூட்சுகளுக்குள் இன்னும் சில நிமிடங்களில் கசக்கிப் பிழிபடப்போக இருக்கும் சோதியை நினைத்து மணியம் மாஸ்டர் பரிதப்பட்டார். தெய்வானை மாஸ்டர் கண்ணைத் துடைத்துக் கொண்டார். அவர்கள் இருவரும் மெல்ல மெல்ல நடந்து மெயின் ரோட்டைக் குறொஸ் பண்ணினார்கள். நானாவின் கடை இரைச்சலைப் பிரிந்து இவர்கள் அப்பால் வந்து விட்டார்கள்.

''தெய்வானை மாஸ்டர்! இந்த மலையிலை ஆட்டு மந்தையளா நாங்க மேயிறோம். எங்கட பொழுது அஸ்தமனத்துக்கு வருகுது பயந்தும்வெருண்டும் இங்கை வாழிறதை நாங்க ஏத்திட்டோம். இது எங்கடை தளிருகளுக்கு வரக்கூடாது, இது எங்கடை தலைவிதி எண்டு சொல்லிக் கொண்டு எங்கடை பிள்ளையளும் இப்பிடியான அடிமைச் சீவியம் நடத்துங்களா இருந்தா நாளைகத இந்த டவுணே ஒரு பெரிய சவக்குழியா மாறியிடும் இங்கை இருந்து அநியாயமாக சிங்களவங்கடை கையாலை சாகிறதைக் காட்டிலும் நாட்டுக்காகப் போராடிச்சாகிறது மேல்.. மாஸ்டர்... இந்த நிமிசமே நான் ஒரு முடிவுக்கு வந்திட்டேன். என்ரை ரண்டு மகன்மாரையும் நான்இயக்கத்திற்கு அனுப்பப் போறேன்....'' மணியம் மாஸ்டர் உறுதியுடன் சொன்னார். விழி ஓரங்களில் விழுவதற்குத் தயாராக இருந்த கண்ணீர்த்துளிகளை ஆனந்தத்துடன் கசக்கிவிட்டார். அந்த மண்ணின் மீது புதிய பிரேமை ஒன்று அவருக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதித்திரையின்

கிற தீ இப்போது கொழுந்து விட்டெரிகிறது. ''எல்லா இசுரேலிய நகரங்களிலும் (கெப்ரோனில் ஒலித்தது போல) அழுகையும் ஓலமும் விரைவில் ஒலிக்கும்'' என்றே கமாஸ்கூறுகின்றது.

எனவே இப்போது தன் வினை தன்னைச்சுடும் என்கிற நிலையிலே அரபாத்தும் றபினும் இருக்கிறார்கள்; சோவியத்தையும்சராக்கையும் நம்பி வளைகுடாப் போரில் தவறான குதிரையில் பணம்கட்டியதால் அரபாத் இழந்ததோ அரபு நாடுகளில் வதியும் பாலத்தீனிய மக்கள் அனுப்பிய 400 — 500 மிலியன் டொலர் வருமானமாகும்.

இதுபோலவே ருஷ்யாவிலிருந்து வந்த பெரும்தொகை யூதரைக்குடியேற்ற தேவையான 10 பிலியன் டொலர் அமெரிக்ககடனுதவியைஅமைதிப்பேச்சுக்களை ஆரம்பிக்காவிட்டால் இழக்கும் நிலையில் இசுரேல் இருந்தது; எனவே இரு தரப்பினரும் அமைதி வழியை ஏற்குமாறு வேறு வகையின்றி தள்ளப்பட்டனர்; இது இவர்கள் கதை.

ஆனால் பாலத்தீனிய தாயகப் பகுதியிலோ, நிலைமைகள் வேறு; அங்கு வெறுப்புணர்வு கொழுந்து விட்டெரிகிறது. இருதரப்பிலும் குறிப்பாக யூதர் தரப்பிலிருந்து இப்போது மதத் தீவிரவாதம் உச்சம் பெறுகின்றது. இவற்றின் விளைவு எந்த நேரமும் இப்பகுதிகளில் பூகம்பம் வெடிக்கலாம் எனக் கருதப்படுகின்றது. ஒன்றில் இவ்வெடிப்பு யூதர் - பாலத்தீனியர் இடையிலான உள்நாட்டுப் போராகவோ அன்றி யூதருக்கு இடையிலான பெரும் கலவரமாகவோ உருவெடுக்கலாம். எது வேண்டுமானாலும் எப்போதும் நிகழலாம் என்கிற நிலையே அங்கு இருப்பதாக மத்திய கிழக்கு ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

எனவே இசுரேலியர் ஆலோசனையின்படி தமிழீழத்திலும் சிங்களக் குடியேற்றங்களை நிறுவி அக்கிரமத்தை அநீதியை ஒழுங்காக்க முயலும் சிங்கள அரசும் என்றோ ஒரு நாள் இசுரேலை விட மோசமானதொரு இக் கட்டான நிலையை அடையும் என்பதில் என்ன சந்தேகம்? இசுரேலிய அனுபவங்களை தமிழீழத் தமிழரை அடக்க உள்வாங்கிய சிங்கள அரசு இப்புதிய பாடத்தைக் கற்றுக் கொள்ளாது விட்டுவிடும் என்பதிலும் ஐயமில்லை. ஏனென்றால் முதலையும் மூர்க்கனும் கொண்டது விடாது என்கின்ற முதுமொழிக்கு டி. பி. யின் அரசு வரலாற்றில் எடுத்துக் காட்டாகப் போகின்றது.

---

### சிறைக்கூடங்கள்

இழையோடியது.

தெய்வானை மாஸ்டர்மணியம் மாஸ்டரின் கையைப் பற்றிக் கொண்டார்.

'மணியம் மாஸ்டர்! நீங்க எடுத்த முடிவைத்தான் நானும் எடுத்திருக்கிறேன். என்ரை மூத்தவளையும் இளையவளையும் அங்கை தான் அனுப்பப்போறேன்' இனக்கலவரம் பற்றிய பயம் எதுவுமின்றி புதிய மிடுக்குடன் அவர்கள் தத்தமது வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.


# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L

DAY CLASSES (8.30 - 2.00)
ஆரம்பம்: 11.04.94 காலை 8.30 மணி

EVENING CLASSES (3.15 - 6.10)
ஆரம்பம்; 11.04.94 மாலை 3.15 மணி

SAT, SUN CLASSES (8.00 - 2.00)
ஆரம்பம்: 10.04.94 காலை 8.00மணி

- மாதாந்த பரீட்சை நடாத்தப்படும்.
- கடமை கட்டுப்பாட்டுடன் நடாத்தப்படும்.
- அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.
- எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது.

(இ-9025)

# ★ 96 A/L கணித-விஞ்ஞான வகுப்புக்கள் ★

## NEW SCIENCE HALL

கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

ஆசிரியர் குழு

இரசாயனவியல்:
திரு. சிவசுப்பிரமணியம் B. Sc (Hons)

பௌதிகவியல்:
திரு. S. சோதிலிங்கம் B. Sc (Special)

தாவரவியல்:
திரு. V.S குணசீலன் B. Sc (Special)

விலங்கியல்:
திரு. தம்பிராஜா B.Sc (Hons) Dip in Ed

தூய | பிரயோக கணிதம்
திரு. குணசிங்கம் B.Sc, Dip in Ed

## NEWSCIENCEACADEMY

எழிலகம் முன்பாக யாழ்ப்பாணம்.

ஆசிரியர் குழு

இரசாயனவியல்
திரு. A. மகாதேவா B.Sc

பௌதிகவியல்
திரு S.J கணேசன் B. Sc (Eng)

தாவரவியல்
திரு. V. S குணசீலன் B. Sc (Special)

விலங்கியல்
திரு. சண்முகநாதன் B. Sc (Hons)

தூய | பிரயோக கணிதம்
திரு. P. வெக்டர் வேலாயுதம் B. Sc

புதியவகுப்புக்கள் 9-4-94 சனிமுதல் ஆரம்பமாகவுள்ளன

விண்ணப்பங்கள் யாவும் 8-4-94 [வெள்ளி] வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்

(இ-9031)

# A/L 96

கலை - வர்த்தக பிரிவுகள்

ஆரம்பம்:- 9-4-94

சனி காலை 8 மணி

| | |
|---|---|
| பொருளியல்:- | மகேந்திரன் |
| கணக்கியல்:- | SAM |
| வர்த்தகம்:- | தேவா |
| அளவையியல்:- | சோதி |
| இந்துநாகரிகம்:- | அருள்நங்கை |
| தமிழ்:- | குழந்தை |
| அரசியல்:- | கியூபேட் |
| புவியியல்:- | குணராசா |
| இந்துசமயம்:- | அருள்நங்கை<br>கிரிதரன் |
| வரலாறு:- | ஸ்ரீதரன் |
| கிறிஸ்தவசமயம்:- | அருட்சகோதரர் |

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். (இ-9032)

# BECON

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

A/L 96

கலை
வர்த்தகம்

| | |
|---|---|
| பொருளியல் - | வரதராஜன் |
| அளவையியல் - | S. S. மனோகரன் |
| வர்த்தகம் - | பசில் |
| கணக்கியல் - | சௌந்தி |
| தமிழ் - | மீரா |
| இந்துநாகரிகம் - | பாலா |
| புவியியல் - | பிரபல ஆசிரியர் |
| கிறிஸ்தவம் - | நிரஞ்சன் |
| இந்துசமயம் - | தாஸ் |
| அரசியல் - | பஞ்சாட்சரம் |
| நாடகமும் அரங்கியலும் - | சிவா |

ஆரம்பம்: 9-4-94

சனி
காலை 9.00 மணி

(இ-9038)

நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்

# சீனாவின் ஆயுத வர்த்தகம்;

# தென்னாசிய அரசியற் சூழலை பாதிக்குமா?

சிறிலங்காவின் இன்றைய பிரதான ஆயுத விநியோகத்தராக சீனா மாறியுள்ளது அதிலும், இவ்வருடத்தின் ஆரம்பத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 500 கோடி ரூபா ஆயுதத்துடனும், கடந்த வாரம் கைச்சாத்தாகிய நான்கு போர்க்கப்பலுக்கான உடன்பாட்டுடனும் இது தெளிவாக வரையறுக்கப்பட்டதாக வெளிவந்துள்ளது.

மேலும் சிறிலங்காவின் முப்படைகளும் இன்று சீன தயாரிப்பு ஆயுதங்களினாலேயே நவீனப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு உதாரணங்களாக சிறிலங்கா விமானப்படை கொண்டுள்ள சுப்பர் சொனிக் குண்டு வீச்சுவிமானங்களையும், இராணுவம் பயன்படுத்தும் ரி-55 ரக டாங்கிகளும் சிறிலங்கா கடற்படைக்கு வந்து சேரவுள்ள நான்கு யுத்தக்கப்பல்களையும் குறிப்பிடலாம்

சிலவேளை சிறிலங்கா ஆயுதப் டைக்கு தேவைக்கதிகமாகவே சீனா ஆயுதங்களை வழங்கியுள்ளது, வழங்க முன்வந்துமுள்ளது என்று கூடக் கூறலாம். இதில் உள்நாட்டுப் போர் ஒன்றிற்கு சுப்பர்சொனிற் விமானங்களை வழங்கியுள்ளமையும், சிறிய அளவினதான விசைப்படகுகளைப் பயன்படுத்தும் போராளிக்கு எதிராக நீர்மூழ்கி எதிர்ப்பு பீரங்கிக் கப்பல்களையும் வழங்க முன்வந்துள்ளமையும் சுட்டிக்காட்டப்படக்கூடியதாகும்

மறுவளமாக நவீனகனரகஆயுதங்கள் என்பதில் மட்டுமல்ல துருப்பினரின் தனிப்பட்ட தானியங்கி ஆயுதங்களையும் சீனாவே பெருமளவில் விநியோகிக்கிறது. சீனத்தயாரிப்பான ரி 56 ரி-81 ரி 82 ரகத் தானியங்கித் துப்பாக்கிகளே சிறிலங்கா இராணுவத்தின் பிரதான தனிநபர் சுடுகலன்கள் ஆகும் இதுவே அவர்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றவையாகவும் விரும்பப்படுபவையாகவும் உள்ளன.

இதேவேளை தனது பிரதான ஆயுத விநியோகத்தராகச் சீனாவை சிறிலங்கா அரசு தெரிவு செய்துள்ளமைக்குப் பல காரணங்கள் உண்டு. இதில் மலிவு விலையில் ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு சீன நிறுவனங்கள் தயாராக இருந்து வருகின்றமையே முக்கிய காரணமாகும்.

சீனாவில் உள்ள பல நிறுவனங்கள் இன்று போட்டி போட்டுக் கொண்டு ஆயுதங்களை விற்பனை செய்வதற்குத் தயாராக உள்ளன இந் நிறுவனங்கள் யாருக்கு ஆயுதம் விற்பனை செய்கிறோம் என்பதை விட எவ்வளவு தொகைக்கு ஆயுதங்களை விற்பனை செய்கிறோம் என்பதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளன. அத்தோடு பல நிறுவனங்கள் ஆயுத உற்பத்தியில் ஈடுபடுவதினால் அவற்றின் மத்தியில் உள்ள போட்டி காரணமாக மலிவு விலையில் விற்பனை செய்கின்றன. இந்தவகையில் மூன்றாம் உலக நாடுகளுக்குப் பொருத்தமான ஆயுதங்களை சப்ளைசெய்யும் நாடு என்ற பெயரையும் சீனா பெற்றுள்ளது;

அடுத்ததாக சீனா ஆயுதங்களை நீண்டகாலக் கடன் அடிப்படையிலும் வழங்கத்தயாராக இருக்கிறது. சிறிலங்கா அரசுக்கு நான்கு போர்க்கப்பல்களை வழங்க முன்வந்துள்ள சீனா இதனை எட்டு முதல் 10 வருட கடன் அடிப்படையில் வழங்க முன் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்;

இவையாவற்றிற்கும் மேலாகச் சீன ஆயுதக் கொள்வனவில் சிறிலங்காவிற்கு அனுகூலமாக இருப்பது எதுவித கேள்வியும் இன்றி தேவையான ஆயுதங்களை வழங்குவதற்கு சீனா தயாராக இருப்பதாகும். ஆரம்பகாலத்தில் சிறிலங்கா அரசாங்கம் ஆயுதக் கொள்வனவிற்கென மேற்கை நம்பியிருந்தாலும் மனித உரிமைப் பிரச்சினைகள் ஆயுதம் எதற்காகப் பயன்படுகின்றது போன்றன தொடர்பான கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டியிருந்தது. ஆனால் சிறிலங்காவைப் பொறுத்து அது பெரிதும் தர்மசங்கடமான நிலையை உருவாக்குவதாகவும் இருந்தது. இந்நிலையில் கேள்வி இன்றி ஆயுதம் வழங்க சீனா தயாராக இருந்தது. சிறிலங்காவைப்பொறுத்து பெரியதொரு பாரத்தைக் குறைப்பதாக இது அமைந்தது;

இதேவேளை சிறிலங்காவிற்கு ஆயுத விநியோகத்தைச் செய்து வந்த சீன நிறுவனங்கள் சிறிலங்காவின் ஆயுத விநியோகத்தில் ஏகபோக உரிமையையும் அநுபவிக்கமுற்பட்டன இதில் வடசீன நிறுவனமான நொறிக்கோ நிறுவனம் சிறிலங்காவில் ஒரு ஆயுத களஞ்சியத்தை அமைக்கும் முயற்சியில் ஈடுபடும் அளவிற்கு இந்நிலை சென்றுள்ளது.

ஆயுத வர்த்தகத்தில் இவ்வாறாக நெருங்கி வந்ததன் விளைவாக சீனாவுடனானசிறிலங்காவின் இராஜதந்திர உறவும் வலுவாக நெருக்கம் அடைந்தது இதனை ஜனாதிபதியாக பதவி ஏற்ற பின்னர் டி. பி. விஜேதுங்கா மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டுப் பயணம் சீனாவிற்கு என்பதில் இருந்து புரிந்து கொள்ள முடியும். அதேவேளை, சீனாவின் உதவிப் பிரதம மந்திரி ஒருவர் கடந்த மாத ஆரம்பத்தில் கொழும்பு வந்து திரும்பியமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால், இராஜதந்திர உறவு எவ்வளவு நெருக்கமடைந்துவரினும் இரு நாட்டுத் தலைவர்களும் தமது சந்திப்பின்போது ஆயுதக் கொள்வனவு தொடர்பாகவே பேசினார்கள்; பேசவுள்ளார்கள் என்றே தகவல்கள் தெரிவிக்கின்றன அதாவது, இன்று சிறிலங்கா - சீன உறவின் மையமாக இருப்பது ஆயுத விற்பனையே ஆகும்

ஆனால், சீனாவின் இவ் ஆயுத வர்த்தகம். தென்னாசியப் பிராந்தியத்தில் சிறிலங்காவுடன் மட்டுமானதல்ல. தென்னாசியாவில், சீனாவின் பிரதான ஆயுதக் கொள்வனவாளராக பாகிஸ்தானே உள்ளது. பாகிஸ்தானுடனான சீனாவின் ஆயுதவிற்பனையானது தரத்திலும் பெறுமதியிலும் சிறிலங்காவுடனானதை விட எத்தனையோ மடங்கு அதிகமாகும். அதாவது, பாகிஸ்தானுக்கான ஆயுத விநியோகத்தில் அமெரிக்கா விட்ட இடத்தை சீனா நிரப்பியுள்ளது நெருக்கடி வேளையில் சீனாவையே பாகிஸ்தான் நம்பியும் உள்ளது.

அத்தோடு, பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிப்பதற்குப் பிரதானமாக உதவிய நாடு சீனா என்றே இன்று உலகத்தாரால் நம்பப்படுகின்றது- அணு ஆயுத தயாரிப்பிற்கான தொழில்நுட்பத்தை மட்டுமல்ல, விஞ்ஞானிகளைக் கொடுத்து உதவியதாகக் கூட அமெரிக்காவின் புலனாய்வு அறிக்கைகள் குறிப்பிடுகின்றன- அத்தோடு, அணுகுண்டுகளைக் காவிச் செல்லக் கூடியவிமானங்களையும், ஏவுகணைகளையும் பாகிஸ்தானுக்கு சீனா விநியோகித்ததாக அறிய வருகின்றது

இதேவேளை, தென்னாசிய பிராந்தியத்திற்குள் அடங்காதுவிடினும் அதன் அண்டைநாடான மியான்மாருக்கும் - பர்மா - பிரதான ஆயுத விநியோகஸ்தராகச் சீனாவே உள்ளது. இதேவேளை, பர்மாவுடனான உறவு இராணுவ உதவி என்பதை விடநெருக்கமான பொருளாதார உறவையும் கொண்டுள்ளது- தற்சமயம் மியான்மாருடன் தனது எல்லையைத் திறந்துவிட்டு வியாபாரம் செய்யும் ஒரேநாடு சீனாவே ஆகும்

இவ்வாறாகச் சீனாவின் ஆயுத வர்த்தகம் தென்னாசியாவிலும், அதன் அண்டை நாடுகளிலும் வளர்ந்து வருகின்றமையானது இப்பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கை அதிகரிப்பதோடு இப்பிராந்தியத்தின் இராணுவச் சமநிலையைப் பாதிக்குமா என்பது பற்றி இன்று பலத்த தொரு கேள்வி எழுந்துள்ளது,

ஆனால் கெடுபிடிப்போர், உலகில் நிலவிய காலத்தில் இவ்வாறான சூழ்நிலையில் பார்த்த கோணத்தில் இன்று இதனைப் பார்க்க முடியுமா என்பதில் பல சந்தேகங்கள் இருக்கத்தான் செய்கின்றன: ஏனெனில் கெடுபிடிப்போர் காலத்தில் பேணப்பட்ட ஆயுத சமநிலையோ அன்றி வலுச் சமநிலையோ இன்றைய புதிய உலக ஒழுங்கில் அர்த்த மற்றவையாகவே மாறி வருகின்றன

இன்று ஆயுதச் சமநிலையில் கவனம் கொள்வதிலும் விட பொருளாதாரப்போட்டியிலும், பொருளாதார வளத்திலுமே அரசுகள் ஆர்வம் கொண்டுள்ளன, எனவே இவ் விடயங்களையும் பொருளாதார நோக்கில் பார்ப்பதில் சற்று அர்த்தங்கள் இருப்பதாகவே படுகின்றது.

தென்னாசியப் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்க வளர்ச்சியானது வெளிப்படையான பார்வையில் இந்தியாவின் ஆதிக்கத்திற்கு முட்டுக்கட்டையானது என்றே கணிக்கப்படுதல் வேண்டும். அதிலும் எல்லைக் கோட்டு விவகாரத்தில் போரிட்டுக் கொண்ட இந்நாடுகளில் ஒன்றின் பிராந்தியத்துக்குள் மற்றதொன்று பிரவேசிப்பது என்பது சந்தேகத்தை ஏற்படுத்துவது நியாயமானதே.

ஆனால் உலகில் புதிய பொருளாதார ஒழுங்கு ஒன்று அறிமுகமாக்கப்பட்ட பிறகு இந்நாடுகளின் உறவில் ஏற்பட்ட புதியபரிணாமங்களை கொண்டு இப்பிரச்சினையை அவ்வாறுதான் பார்க்கவேண்டுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளன. எடுத்துக்காட்டாக கடந்த வருட இறுதியில் இந்தியப் பிரதமர் நரசிம்மராவும், சீனப் பிரதமர் லீபெங்கும் செய்து கொண்ட மூன்று முக்கிய ஒப்பந்தங்களைக் கூறலாம்; இவ் ஒப்பந்தங்கள் சீன-இந்திய எல்லைப் பதற்றத்தைத் தணித்துள்ளதோடு அப்பிராந்தியத்தில் படைக்குறைப்பிற்கும் புதிய பொருளாதார உறவுகளுக்கும் வழி வகுத்துள்ளது எனலாம்.

இதை விட அடுத்த முக்கிய விடயமாக அமைந்தது கடந்த மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் மாநாட்டில் சீனா பாகிஸ்தானை நட்டாற்றில் கைவிட்டு இந்தியாவிற்கு உதவியமையாகும். காஷ்மீர் விவகாரத்தை சர்வதேச பிரச்சினையாக்கும் நடவடிக்கையாக இந்தியாவிற்கு எதிராகப் பாகிஸ்தான் கொண்டுவந்த தீர்மானத்தை கைவிடுமாறு பாகிஸ்தானை ஈரானுடன் சேர்ந்து சீனா நிர்ப்பந்தித்து வெற்றியும் கண்டது.

இவ்விரு சம்பவங்களும், உலகம் கெடுபிடிப் போர் காலத்தில் இருந்த வெளியுறவுக் கொள்கையில் இருந்து முற்றாக மாற்றமான வெளியுறவுக் கொள்கையைக்கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளமையைக் காட்டுவதாகவே உள்ளது. இதில்முன்னர் போல் அணிசேர்ந்து கொண்டு ஒரு அணியை எதிர்ப்பதைவிட்டு விட்டு தற்பொழுது முக்கியமாகப் பொருளாதார நலனைக் குறியாகக் கொண்டு செயற்படுவதையே காணக்கூடியதாகவுள்ளது.

ஆனால், எது எவ்வாறு இருப்பினும், தென்னாசியாவில் சீனாவின் இராணுவ உறவுகள், இராஜ தந்திர உறவுகள் இப்பிராந்தியத்தின் அரசியலைப் பாதிப்படையச் செய்வதை தவிர்க்க முடியாதுபோகும் என்றே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். ஏற்கனவேயப்பானுடன் கிழக்கு ஆசியாவிலும் தென்கிழக்காசியாவிலும் பெரும் வர்த்தகப் போட்டியில் ஈடுபட்டுள்ள சீனா தென்னாசியாவிலும் அப்போட்டியில் ஈடுபடுதல் தவிர்க்க முடியாதுபோகலாம்,

ஆனால் தென்னாசியாவிற்கு ஏற்றுமதியாகும் மின்சார இலத்திரணியல் பாவனைப்பொருள்கள் உற்பத்தியில் தற்பொழுது யப்பானுடன் சீனாவினால் போட்டியிடமுடியாது. இந்நிலையில் இராணுவ ரீதியான பெரும் பணம் புரளும் வர்த்தகத்தில் சீனா ஈடுபடுகின்றது இந்நிலையானது முழுமையான வர்த்தகம் என்ற ரீதியில் நோக்கப்படினும் அதன் அழுத்தங்கள் அரசியலிலும் பொருளாதாரத்திலும் பதியாமல் இருப்பதென்பது சாத்தியமாகப்போவதில்லை இதற்குமியாமாரில்-பர்மா-இன்று சிறப்பானதொரு உதாரணமாகும்

இவ்வாறானதொரு நிலை சிறிலங்கா அரசியலிலும் சற்று வெளிப்படையாகவே தெரியத்தொடங்கியுள்ளது. கடந்தவாரம் கைச்சாத்தாகிய 115 கோடி ரூபா பெறுமதியான யுத்தக்கப்பல் கொள்வனவு தொடர்பான பேச்சுக்கள் ஒரு சமயம் குழப்பம் அடையும் நிலையை எட்டியபோது இந்நிலை தென்பட்டது. இவ் ஒப்பந்

**ஜெயராஜ்**

தம் கைச்சாத்தான நிலையில்மே மாதம் சீனாவிற்கு மேற்கொள்ளவிருந்த சிறிலங்கா ஜனாதிபதியின் விஜயம் பாதிக்கப்படலாம் என்ற நிலையும் உருவானது, அதாவது இவ்ஆயுதக் கொள்வனவில் சீனா மறைமுகமாக நிர்ப்பந்தித்ததுஎன்றே கொள்ள முடியும்,

இந்நிலையில் தென்னாசியப்பிராந்தியத்தில் சீனாவின் இராணுவ-இராஜதந்திர அழுத்தங்கள் எழும் நிலையில் தென்னாசிய நாடுகளுக்கு இடையில் அரசியல்சூழ்நிலை மாற்றங்களுக்கும் வாய்ப்புகள் அதிகரிப்பது தவிர்க்க முடியாது போகலாம். அதிலும் பல முரண்பாடுகளைக் கொண்டுள்ள இப்பிராந்திய நாடுகளின் உறவில் இது மறைமுகமாகவாவது தாக்கத்தை விளைவிக்க கூடும்- ஏனென்றால், சீனாவின் இப்பிரவேசம் இந்நாடுகளின் இராணுவ சமநிலையை மாற்றிஅமைக்கும் என்பதில் எதுவித சந்தேகம் இல்லை என்பதினால் ஆகும்,

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு:
1929 - 10 - 27

உதிர்வு:
1994 - 03 - 09

திதி:
08 - 04 - 1994

திருமதி
### செல்லம் கணபதிப்பிள்ளை

எம்மை ஆறாத்துயரில் விட்டு
மீளாத் துயில் கொண்ட
இல்லத்தின் சுடரொளியே, பாசதீபமே
தெய்வத்தின் இருப்பிடமே
திங்களொன்று சென்றாலும் - எம்
நினைவலைகள் ஓய்வதில்லை
என்றும் உங்கள் பாச நினைவுகளுடன்

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
உறவினர்கள்.

(7950)

## கோமல்

முடியுமா? எந்த நிலையில் உறுதிப்படுத்திக் கொள்வது என்பதை ஆராய்ந்துதானே செய்ய முடியும். அந்த நிலையில் இன்றைக்கு சூழலில் சில விடயங்களை நாம் செய்ய முடியாது என்பதுதான் யதார்த்தமான நிலைமை, அதனை நீங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும்.

○ இலங்கைக்கான இப்பயணத்தில் மலையகத்தில் பேசும்போது மலையக மக்களின் துயர் அல்லது அவர்களது உணர்வுகள் உங்களுக்கு இன்னும் எட்டவில்லை யென்று கூறியிருக்கிறீர்கள். ஆனால் தமிழ்நாட்டில் மலையகத்திலிருந்து நாடு கடத்தப்பட்டு மீளக் குடியமர்த்தப்பட்ட மக்கள் சுமார் இருபது ஆண்டு காலம் அங்கு வாழ்கின்றனர். நெய்வேலி குன்னூர், காஞ்சிபுரம் போன்ற பகுதிகளில் இவர்கள் உள்ளனர். இந்த நிலையிலும் இவர்கள் துயர் எட்டவில்லை எனக் கூறுவது சரியாகுமா?

ஃ என்னுடைய கணிப்பில் அப்படித்தான் தோன்றுகிறது. ஒருவேளை எனது கணிப்பு தவறானதாக இருக்கலாம். இந்த மக்களின் துயர் ஒரு பத்து சதவீதம் தானும் எட்டியிருப்பதாக எனக்குத் தெரியவில்லை அங்கே வேறு விதமான பலவிதமான பிரச்சினைகள் வருகின்றன. அந்தப் பிரச்சினைகளுக்கு மத்தியில் இத்தகைய பிரச்சினைகளின் தாக்கம்அடிபட்டுப் போகிறது. எங்களுக்கு உள்ளூர் பிரச்சினைகள் நிறைய வே இருக்கின்றன. உள்ளூர்பிரச்சினைகளே ஆயிரம் இருப்பதால இத்தகைய பிரச்சினைகளின் தாக்கம் கம்மியாகப் போய்விடுகின்றது போலும்.

## 7-ம் ஆண்டு நினைவலைகள்



### சற்குணநாதன் நந்தகோபன்

| | |
|---|---|
| மொட்டெனத் தாய்மடியில் | மொட்டெனத் தமிழ்மண்ணில் |
| 17.09.1969 | 08.04.1987 |

என்றும் நிஜமாய் இருந்த நீ - இன்று
நிழலாய் ஆனது ஏன் மகனே?
அன்புக்கோர் அண்ணனாய்
பாசத்தின் தம்பியாய்
பண்பிற்கோர் மாமனாய் இருந்து
ஏழாண்டு ஓடி மறைந்ததய்யா
நீ திரும்பி வாராயோ? நந்தகோபா-
நாளிரண்டு நலிவடைந்து கதறுகின்றோர்நாம்
அன்பாலே ஒன்றானோம் அருகில் நின்றோம்
ஆரப்பா உனைப் பிரித்தார் எம்மைவிட்டு
கண்மணியே சற்கண்டே! கன்னித் தமிழின்
பண் நீயே! பாரினைமத் தவிக்கவிட்டு
விண்மேவிச் சென்றாயோ - விதியின் சதியோ?
கண்ணீரால் உன்பாதம் கழுவுகின்றோம்!
மணமாலை சூடி - மங்கையவள் - அருகிருக்க
கணமேனும் உனைக் காண நாமெல்லோம் காத்திருக்க
பிணமாலை சூடினாயே- பேச்சற்றுத் தவிக்கின்றோம்
குணமே மிறைவன்தாள் மலராக மாறனையோ?

உன் உயர்ந்த ஆத்மா சாந்தியுறுக!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்:
சி. சற்குணநாதன்,
பிருந்தாவனம்,
மீசாலை.

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அக்காமார்,
தம்பி, தங்கை, மருமக்கள்,
நண்பர்கள்.

(5091)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. சிவம் கணபதிப்பிள்ளை

இலங்கைக் காப்புறுதிக்கூட்டுத்தாபன யாழ் கிளையின் முன்னாள் பிரதம லிகிதர் (மேர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட் யாழ். கிளையின் முன்னாள் காப்புறுதி முகாமையாளர்).

| | |
|---|---|
| மண்ணகத் தோற்றம்:- | விண்ணக மாற்றம்:- |
| 08-08-1925 | 04-04-1993 |

திதி: 08 04-94

சிவத்தில் சிவமாய் சிந்தையில் நிறைந்த எந்தையே
சீமையும் போற்ற சிறந்து வாழ்ந்த சிவமே
சிவனும் ஆகி திருவில் நின்ற அருளே
சிவங்கள் வாழ செல்வமும் சேர்ந்த உருவே.

காப்பு மிக்க கணபதிப்பிள்ளையராய்!
காப்புறுதியின் கடமைத் தலைவனாய்!
காலத்தை வென்ற கணபதி பக்தனாய்!
கருணைக் கடலாய் காலத்தை வென்றார்!
காலங்கள் மாறினும் கனவுகள் மாறுமோ?
சாந்தி! சாந்தி! சாந்தி!

பளிதோலை,
அச்சுவேலி.

பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மைத்துனர்கள், உறவினர்கள்.

(7949)

## மலர்வு நாள் நினைவுகள்



### கப்டன் மலரவன் (லியோ)

(காசிலிங்கம் விஜிந்தன்)

பிறப்பு: 08.04.1972

மலரன்னை ஈன்றெடுத்த மைந்தனே - தமிழ்
மாநிலம் போற்ற வாழ்ந்த மைந்தனே!
உன்னன்னை தவமிருந்து பெற்றெடுக்க
விடுதலை மண்ணுக்காய் வீறுகொண்ட வேங்கை லியோவே!

மாணவர் அமைப்பின் நாயகன் மலரவனே!
தாயக மண்ணிற்காய் உழைத்து
புயற் பறவையென புனர்பெயர் சூடி
களம்பல கண்டு எதிரியை மண்டியிட வைத்தவனே

போர் உலாவும் படைத்து களிப்புறும் வேளை
தேசக்கரங்களை உன்னிடத்தில் நீட்டி அழைத்த தமிழன்னை
பாசமுடன் அரவணைத்தாள் தன் தமிழ் நிலத்தில்
மலர்ந்த நாளாம் சித்திரைத் திங்கள் எட்டாம் நாள்

கண் கலங்கியே நீர் சுசிய சில கவித் துளிகள்
நெஞ்சங்களில் நீங்காத பசுமை நினைவுகள் - கல்லறையில்
பாச உள்ளங்கள் பரிதவிக்க நீர்த்துளிகள்
அன்புள்ளங்கள் நினைவுகூர நாமும் வாழ்த்துகிறோம்.

- மாமா குடும்பத்தினர்

(7958)

புருண்டி - உகண்டா ஜனாதிபதிகள்

# பயணம் செய்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது

## ஜனாதிபதிகளுடன் ராணுவத்தளபதியும் பலி

(லண்டன்)

புருண்டி ஜனாதிபதி சுப்பிரால் கோலமிலா மற்றும் உகண்டா ஜனாதிபதி யுவனில் கபிரிகானா ஆகிய இருவரும் கொல்லப்பட்டனர். அவர்கள் பயணம் செய்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதை அடுத்து அவர்கள் இருவரும் கொல்லப்பட்டனர். நேற்றுக்காலை நடைபெற்ற இச் சம்பவத்தில் உகண்டாவின் இராணுவத்தளபதியும், புருண்டியின் இரு அமைச்சர்களும் கொல்லப்பட்டனர்.

இந்த விமானம் உகண்டாவின் தலைநகரம் கிகெலியில் விமான நிலையத்தில் தரை இறங்கிய போது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. துப்பாக்கிப்பிரயோகத்தில் விமானம் தீப்பற்றியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தன்சானியாவின் தலைநகரம் டார்சலேமில் நடைபெற்ற புருண்டி சமாதான மகா நாட்டில் கலந்து கொண்டு திரும்பிக் கொண்டிருந்த போது இச் சம்பவம் நடைபெற்றது.

இதேவேளை உகண்டாவின் அமைச்சர்கள் மூவர் ஆயுதந் தாங்கிய குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டதாகவும் அங்குள்ள ஐ. நா. அதிகாரிகள் தரப்பில் சொல்லப்படுகிறது அமைச்சர்கள் குடும்பத்தினரும் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தீவக மக்களுக்கான மாதாந்த உதவிப் பணம்

புங்குடுதீவு, வேலணை, நயினாதீவு பகுதிகளைச் சேர்ந்த பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்கள் இக் கொடுப்பனவை யாழ்ப்பாண மத்திய தபாலகத்தில் தற்காலிகமாக இயங்கும் வேலணை, புங்குடுதீவு தபாலகங்களில் பெற்றுக் கொள்ளலாமென பிரதேச செயலர் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்த செய்திக் குறிப்பொன்றில் மேலும் கூறுகையில் தை, மாசி, பங்குனி மாதங்களுக்கான கொடுப்பனவு தற்போது வழங்கப்படுகிறது எனவும் கெற்பலி அகதி முகாமில் வசிக்கும் மக்களுள் இக் கொடுப்பனவை பெறுவோர் விடத்தல் பளை உப தபாலகத்தில் பெற்றுக் கொள்ளலாமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் புற்றுநோய், தொழுநோய், சுசரோகம் போன்ற நோயாளர்களுக்கான தை, மாசி, பங்குனி மாதக் கொடுப்பனவுகளும் புங்குடுதீவு, வேலணை, விடத்தல்பளை தபாலகங்களில் பெற்றுக் கொள்ளலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறிலங்கா கிரிக்கட் அணி தலைவர் ராஜினாமா

### தெரிவுக்குழுவில் ஐவர் பதவி துறப்பு

(கொழும்பு)

"ஷாஜா" கிரிக்கட் போட்டியில் விளையாட்டு வீரர் தெரிவு குறித்து அதிருப்தியடைந்துள்ள சிறிலங்கா கிரிக்கட் அணியின் தலைவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அடுத்தவாரம் ஷாஜாவில் நடைபெற உள்ள "ஒஸ்டலேசியா" கிரிக்கட் போட்டியில் கலந்து கொள்வதற்கான சிறிலங்கா அணியைத் தெரிவு செய்த விளையாட்டுத்துறை அமைச்சின் முடிவை எதிர்த்து இதன் தலைவர் அருச்சுனா ரணதுங்கா தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

கிரிக்கட் போட்டியில் கலந்து கொள்ளமுன்னர் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய போது உப தலைவர் அரவிந்த டி சில்வா மற்றும் மூன்று விளையாட்டு வீரர்களை ஷாஜா செல்லும் அணியில் இருந்து நிறுத்தினாலேயே மேற்படி நிலை தோன்றியுள்ளது.

இதேவேளை கிரிக்கட் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் ஏழு உறுப்பினர்களில் ஐந்து பேர் தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளதாக தெரியவருகின்றது.

தெரிவுக்குழு உறுப்பினர்களான கே. எம். நெல்சன் றோய்க் டயஸ், துலிப் மெண்டிஸ், ரஞ்சன் மடுகல்ல, தஜா சார்பந்து ஆகியோரே தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

## சம்பள கொடுப்பனவு

லங்கா சீமெந்து நிறுவன ஊழியருக்கான இரண்டுமாத கொடுப்பனவு மற்றும் பண்டிகை முற்பணம் நாளை காலை 8-30 தொடக்கம் பி. ப. 3-30 மணிவரை மட்டும் யாழ்ப்பாணம் வர்த்தக வங்கி கிளையில் வழங்கப்படுமென அறிவிக்கப்படுகிறது.

## சமாதான

தைகளை நடாத்தி வருகின்றது.

இந்த நிறுவனத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் குழு ஒன்று அண்மையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. ஹமில்டன் வணசிங்காவுடனும் ஏனைய பல அரசாங்க உயர் அதிகாரிகளுடனும் மேற்படி விடயம் குறித்துப் பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளது. இதற்கு முன்னர் இவ் வருட ஆரம்பத்தில் கனடா நாட்டில் சந்தித்த மேற்படி நிறுவனத்தின்சகோதர நிறுவனங்களின் அதிகாரிகள் சமாதானத்தை உருவாக்கும் முயற்சியின் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

அதேவேளை சமாதான முயற்சியின் ஒரு கட்டமாக மேற்படி நிறுவனத்தைச் சார்ந்த பிலிப்பைன்ஸ் நாட்டவரான பேராசிரியர் எட்கார் இயா அடுத்த மாதம் முதல் வாரமளவில் கொழும்புக்கு விஜயம் செய்ய உள்ளார். இவர் கொழும்பில் அரசாங்கத்தில் உள்ள சமாதானத்தில் ஆர்வம் காட்டும் அரசியல் தலைவர்களையும் ஏனைய மட்டத்தில் உள்ள பலரையும் சந்தித்து சமாதான முறைகள் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடாத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (க, தி)

## காரைநகரில்

காயப்பட்ட நிலையில் சங்கானை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

## ஐ.தே.க

அவர் தெரிவித்துள்ளார். தனது அணியானது எவருடனும் சாராது சுதந்திரமாக இயங்கும் அணியென்றும் இது தான் உண்மையான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியென்றும் மேலும் தெரிவித்தார்.

## யா. பொ. கல்வி

கப்படவுள்ளன.

இந்நிகழ்வு இன்று பகல் 2.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர்.

இவ்விழா அருட்திரு. பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் தலைமையில் நடைபெறும்.

பரிசில் பெறும்மாணவர்கள் இன்று பகல் 1.00 மணிக்கு முன்னதாக மண்டபத்திற்கு சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## புலிகளின் குரல் வானொலியின் நிகழ்ச்சி நிரல்

1994-04-08 - வெள்ளி - இரவு

8-01 ற்கு — அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "அணையாத தீபம் அன்னை பூபதி"

8-10 ற்கு — கலைமஞ்சரி நிகழ்ச்சியில் முதலில் சிறுகதை "அம்மா" அடுத்து கவிதை- "நண்பனே"

8-30 ற்கு - செய்திகள்

8-40 ற்கு — அரசியல் அரங்கம் "தென்னாபிரிக்காவில் திடீர் திருப்பங்கள்"

8-50 ற்கு - வாத்திய கானங்கள்

1994-04-09 சனி காலை

7-02 ற்கு - மாவீர வணக்கம்

7-15 ற்கு - அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "போர்க்களத்துப் பூவான அன்னை பூபதி"

7-25 ற்கு - நீங்கள் கேட்டவை

7-45 ற்கு - செய்திகள்

7-50 ற்கு - பத்திரிகைச் செய்திகள்

7-55 - தாயகப்பாடல்

## மேலும் சில பாடசாலையின் பரீட்சைப் பெறுபேறுகள்

| பாடசாலை | பெறுபேறு | | தோற்றியோர் | சித்தியடைந்தோர் |
|---|---|---|---|---|
| ஹாட்லிக் கல்லூரி | 7டி | 2 | - | - |
| | 6டி | 2 | | |
| | 6டி 1சி 1எஸ் | 1 | | |
| | 6டி 2எஸ் | 1 | | |
| | 5டி 3சி | 5 | | |
| | 5டி 2சி 1எஸ் | 12 | | |
| பெண்கள் உயர் கல்லூரி பருத்தித்துறை | 7டி | 3 | 140 | 93 |
| | 6டி 1சி | 3 | | |
| | 5டி 2சி | 6 | | |
| | 4டி 3சி | 8 | | |
| வட இந்து மகளிர் | 5டி 2சி | 3 | 120 | 38 |
| | 4டி 3சி | 4 | | |
| | 3டி 4சி | 2 | | |
| வேலாயுதம் மகா வித்தியாலயம் | 2டி 2சி 4எஸ் | 1 | | |
| | 3டி 3சி 2எஸ் | 1 | | |
| தொண்டமனாறு வீரகத்தி பிள்ளை கல்லூரி | 3டி 3சி 2எஸ் | 1 | 52 | 12 |
| | 2டி 3சி 2எஸ் | 1 | | |
| | 3டி 1சி 2எஸ் | 1 | | |
| சிதம்பரா கல்லூரி வல்வெட்டித்துறை | 3டி 3சி 1எஸ் | 1 | 48 | 09 |
| | 3டி 1சி 3எஸ் | 2 | | |
| | 2டி 2சி 3எஸ் | 2 | | |
| சிவகுரு வித்தியாலயம் வல்வை | 5டி 3சி | 1 | 38 | 15 |
| | 4டி 1சி 3எஸ் | 1 | | |
| | 2டி 5சி 1எஸ் | 1 | | |
| வல்வை மகளிர் கல்லூரி | 5டி 1சி 1எஸ் | 1 | 74 | 21 |
| | 4டி 3சி | 1 | | |
| | 3டி 2சி 2எஸ் | 1 | | |
| | 3டி 4சி | 1 | | |
| | 3டி 3சி 1எஸ் | 1 | | |
| உடுப்பிட்டி மகளிர் கல்லூரி | 6டி 1சி | 1 | 102 | 49 |
| | 5டி 2சி | 6 | | |
| | 4டி 3சி | 4 | | |
| | 3டி 4சி | 3 | | |
| | 3டி 3சி | 3 | | |
| நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 5டி 2சி | 1 | 92 | 47 |
| | 4டி 4சி | 1 | | |
| | 4டி 2சி 1எஸ் | 1 | | |
| விக்னேஸ்வரா கரவெட்டி | 4டி 3சி | 1 | 261 | 55 |
| | 4டி 2சி | 1 | | |
| திரு இருதயக் கல்லூரி | 4டி 3சி 1எஸ் | 1 | 39 | 06 |
| | 2டி 2சி 3எஸ் | 1 | | |
| | 1டி 2சி 4எஸ் | 1 | | |
| வதிரி தேவரையாளி கல்லூரி | 2டி 4சி 1எஸ் | 1 | 65 | 09 |
| | 1டி 4சி | 1 | | |
| பரமேஸ்வரா கல்லூரி வெற்றிலைக்கேணி | 3சி 4எஸ் | 1 | 10 | 04 |
| | 3சி 3எஸ் | 2 | | |
| | 3சி 2எஸ் | 1 | | |
| றோ.க.த.க. பாடசாலை மணற்காடு | 6சி 1எஸ் | 1 | 15 | 06 |
| | 4சி 1எஸ் | 2 | | |
| | 3சி 2எஸ் | 2 | | |
| அ.த.க. பாடசாலை அம்பன் | 2டி 3சி 2எஸ் | 1 | 26 | 14 |
| | 1டி 3சி 2எஸ் | 1 | | |
| | 1டி 3சி 1எஸ் | 1 | | |
| | 6சி | 1 | | |
| இ. இ. த. க. பாடசாலை ஆழியவளை | 4டி 2சி 1எஸ் | 2 | 30 | 11 |
| | 2டி 3சி 1எஸ் | 1 | | |
| | 1டி 3சி 2எஸ் | 1 | | |
| நாகர்கோவில் ம. வித் | 2டி 2சி 2எஸ் | 1 | 30 | 01 |
| இந்து த. க. பாடசாலை மருதங்கேணி | 2டி 1சி 2எஸ் | 1 | 39 | 04 |
| | 1டி 3சி 1எஸ் | 1 | | |
| | 1டி 2சி 3எஸ் | 1 | | |
| | 3சி 3எஸ் | 1 | | |
| உடுத்துறை மகா வித். | 3டி 1சி 2எஸ் | 1 | 20 | 10 |
| | 1டி 3சி 2எஸ் | 1 | | |
| அ. த. க. பாடசாலை செம்பியன்பற்று | 2டி 3சி 1எஸ் | 1 | 43 | 10 |
| | 1டி 3சி 2எஸ் | 1 | | |
| | 1டி 2சி 3எஸ் | 1 | | |
| றோ. க. பாடசாலை கலட்டி | 1டி 5சி | 1 | | |
| தெ. மி கல்லூரி புலோலி | 1டி 2சி 3எஸ் | 1 | | |
| அ. மி. கல்லூரி உடுப்பிட்டி | 7டி | 2 | | |
| | 5டி 3சி | 1 | | |
| | 5டி 2சி | 1 | | |
| | 4டி 1சி | 3 | | |
| | 3டி 4சி | 3 | | |
| மத்திய மகளிர் கல்லூரி நெல்லியடி | 7டி | 1 | | |
| | 5டி 2சி | 1 | | |
| | 4டி 3சி 1எஸ் | 1 | | |
| | 4டி 3சி | 4 | | |
| | 4டி 2சி | 3 | | |
| | 3டி 4சி | 2 | | |
| அ. த. க. பாடசாலை இமையாணன் | 4டி 2சி 2எஸ் | 1 | | |
| | 3டி 3சி 1எஸ் | 1 | | |
| | 2டி 3சி 2எஸ் | 1 | | |
| யாக்குரு வித்தியாலயம் கட்டைவேலி | 1டி 2சி 2எஸ் | 1 | | |
| பொன்னம்பலம் வித்தியாலயம் | 2டி 5சி 1எஸ் | 1 | | |
| | 1டி 3சி 1எஸ் | 1 | | |
| அ. த. க. பாடசாலை கம்பர் மலை | 5டி 1சி 1எஸ் | 1 | | |
| | 2டி 4சி | 3 | | |
| | 6சி 1எஸ் | 1 | | |
| ஞானசாரியார் கல்லூரி கரவெட்டி | 3டி 3சி 2எஸ் | 1 | | |
| | 2டி 4சி 2எஸ் | 2 | | |
| சரணவாய் ம. வித் | 1டி 2சி 4எஸ் | 1 | | |

## மலர்வு நாள் நினைவுகள்



### கப்டன் மலரவன்
### (லியோ புயற்பறவை)
### காசிலிங்கம் விஜிந்தன்

மலர்வு: 8 - 4 - 1972 உதிர்வு: 24 - 11 - 1992

எம்மினிய மலரவனே! - இளையவனாய்
இம் மண்ணில் நீ மலர்ந்த நாளின்று
எம் இதய மலரே யுனை
மனமார வாழ்த்திட நெஞ்சம் ஏங்குதடா!
எம் பாச - மலரவனே! இன்றோ
நின் கல்லறையைக் கண்ணீரால் கழுவி
வண்ண மலர்களால் மாலையிட்டு
எண்ணியே ஏங்கித் தவிக்கிறோமடா!
மண்ணின் மைந்தனே! மகத்தான
நின் இலட்சிய இலக்கு
இதமாக ஈடேற வேண்டி
இதயத்தால் இறைஞ்சுகிறோம்.

8-4-94 இன்று மாலை மூன்று மணியளவில் 'மலரகம்' இல்லத்தில் நடைபெற இருக்கும் தேநீர் விருந்தில் கலந்து கொள்ளுமாறு அன்பு நெஞ்சங்கள் அனைவரையும் நேசக்கரம் நீட்டி அழைக்கிறோம்.

'மலரகம்'
435, சங்கீதா வீதி, - குடும்பத்தினர்
திருநெல்வேலி. (7966)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



### தம்பிப்பிள்ளை பூபாலசிங்கம்
(சாரதி)

மலர்வு: 03-12-1930 உதிர்வு: 24-03-1990
திதி: 08.04.1994

எம்மை விட்டு பிரிந்து ஆண்டு
நான்கு ஆகிவிட்ட போதும்
உனது புன்சிரிப்பும் பாசமும் எங்கள்
நெஞ்சங்களில் என்றும் மறையாது.

அச்செழு, மனைவி, மக்கள், மருமக்கள்,
நீர்வேலி. (7965) பேரப்பிள்ளைகள்

## மீனவர் மீது தாக்குதல்
(குருநகர்)

நேற்று அதிகாலை குடாக்கடலில் நுழைந்த சிறிலங்கா கடற்படையின் டோறா பீரங்கிப் படகுகள் கடலில் தொழிலில் ஈடுபட்டு நின்ற மீனவர்களை நோக்கி தாக்குதலை நடத்தியது.

கடலில் வலைகளைக் கைவிட்டு வள்ளங்களில் மீனவர்கள் கரை வந்து சேர்ந்தனர்.

படகுகளில்ஒன்று கரைக்கு சமீபமாகவும் மற்றொன்று அப்பாலும் இச்செய்தி எழுதப்படும் வரை நங்கூரமிட்டு நின்றதைக் காணக் கூடியதாக இருந்தது. (21)

## மின்னொளி உதைபந்தாட்டம்
(மானிப்பாய்)

யாழ் பரியோவான் கல்லூரியில் நடைபெற்று வரும் மின்னொளியிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 7 00 மணிக்கு சென்மேரீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விநாயகர் விளையாட்டுக்கழகமும் பின்னர் டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து திருமலை நட்சத்திர விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன.

## பரீட்சை முடிவுகள்
(யாழ்ப்பாணம்)

யாழ் தொழில் நுட்பக்கல்லூரி வியாபாரகற்கை நெறிக்கான தேசிய டிப்புளோமா 1992ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதி தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ளன.

இம் முடிவுகளின்படி இ. சுரேஷ், என். காயத்திரி, ரி. வெனரி, வி. நந்தினி, ஏ. என். கிறிபாமா, எஸ். கிறிஸ்காந்தராசா, ரி. விஜயபாலினி ஆகியோர் சித்திபெற்றுள்ளனர்.

மேலும் ரி. மீனாம்பாள், பி. பாலகரன், என். துஷ்யந்தகுமாரி ஆகியோர் நுண்சித்தி பெற்றுள்ளனர்.

## வெளியீட்டு விழா

இன்று காலை 11:30 மணியளவில் யா/வேம்படி மகளிர் கல்லூரியில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு யாழ் கோட்டத்தால் "கல்விக் கண்" கையெழுத்து சஞ்சிகை வெளியீட்டு விழா. விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு யாழ் கோட்டப் பொறுப்பாளர் செல்வி எஸ். கௌசி அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

## பொதுக்கூட்டம்

விஞ்ஞானபீடமாணவர்களுக்கான பொதுக்கூட்டம் ஒன்று இன்று காலை 10.00 மணிக்கு நடைபெற இருப்பதால் சகல விஞ்ஞான பீட மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

## அந்தியேட்டி அறிவித்தல்

நண்பர்கள், ஆதரவாளர்கள், உறவினர்களுக்கு அறியத்தருவதாவது;

கரவெட்டியில் வசிக்கும் ஆ. குமாரசாமியின் தாயாரின் அந்தியேட்டிக்கிரியை நாளை 9.4.94 ந் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு எனது இல்லத்தில் நடைபெறும் என்பதை மிகவும் தாழ்மையுடன் அறியத் தருகிறேன்.

இப்படிக்கு
மகன் ஆ. குமாரசாமி
(ஆர்மோனிய மாஸ்டர்)

ஆ. குமாரசாமி
செங்குந்தர் வீதி,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. (5878)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 06.04.1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1562

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

28-3018, 24-5955, 26-6461, 24-5140, 27-7043, 26-7526, 26-7540, 26-9140, 24-6533, 27-4019, 24-9773, 24-5529, 26-7353, 24-7628, 42-2432, 42-0488, 41-7273, 41-8617, 41-1227, 42-9326.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

26-1495, 27-4024, 28-2049, 24-5041, 27-4628, 28-9249, 26-4139, 40-1516, 24-4467, 28-9259, 24-6475, 26-0536, 27-6493, 28-2212, 28-1110, 26-0560.

### 07.04.1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1580

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

43-8882, 41-8096, 27-2020, 40-2394, 24-917- 27-9758, 43-1019, 26-1741, 24-4265, 42-3927, 27-5099, 27-6439, 41-8031, 27-1380, 26-3638, 27-4070, 28-1706, 28-7261.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

40-7299, 28-1686, 42-3114, 26-9797, 24-6110, 26-0547.

## பரிசளிப்பு விழா

1993 ம் ஆண்டில் நடைபெற்ற தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வின் பரிசளிப்பு விழா யாழ். இந்துக் கல்லூரியில் இன்று (08/04/94) வெள்ளிக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை உறுப்பினர் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

மேற்படி தேர்வு சிறப்புற நடந்தேறப் பல வகையாலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் பேரவையின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை
(7979)

## யாழ் ஸ்ரீதர் திரையில்

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி ஞாயிறு காலை 10.30
மாலை 4.00, 6.00 மணி

**YOUNG DRAGONS**
**THE KUNG FU KIDS**
(கலர்)

ஒளி வீச்சு பெப்ரவரி - 94
மாத ஒளிவீச்சு

ஒவ்வொரு சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் பிற்பகல் 2.30 மணிக்கு காண்பிக்கப்படும்.

(இ-9051)

## ஆதரவற்ற சிறார்களின் வளர்ச்சி நிதிக்கான
## "ராசி சிவ்க்ஸ்"

ஆதரவில் மின்னொளியில் மிளிரப்போகும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி - 1994

இடம்:- பரியோவான் கல்லூரி மைதானம்
காலம்:- 08.04.1994
நேரம்:- பி. ப 7.00 மணி

பிரதம விருந்தினர்:- திரு. த. அருணகிரிராஜா
(உதவிக் கல்விப் பணிப்பாளர், உடற்கல்வி-கல்வி வலயம்)

பங்குபெறும் அணிகள்:

(1) சென்மேரீஸ் விளையாட்டுக் கழகம் எதிர் விநாயகர் விளையாட்டுக் கழகம்
(2) டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் திருமலை நட்சேத்திரம் விளையாட்டுக் கழகம்

பிரவேசம் ரூபா 25.00

ஃ பந்து விளையாட்டை ரசிப்பதுடன் நிந்தைக்கினிய சிறார்களுக்கும் உதவுங்கள்

(இ9041)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 61-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.